# திருக்கல்யாணத் தாய்


**www. thirukalyanamatha.com** தொலைபேசி : 04639 - 261230

**kalyanamatha@gmail.com**



ஆசிரியர் & வெளியிடுபவர்

அருட்திரு.முனைவர் **R. ஜோசப் ரவிபாலன்**

**ஆலோசகர் குழு**

அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட்திரு. ஜோசப் ஸ்டார்லின்
அருட்திரு. ஜோசப் பாக்கியராஜா
அருட்சகோதரி. புளோரா

**ஆசிரியர் குழு**

அருட் சகோதரி. மைக்கிள்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்



**தொடர்பு முகவரி**

திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230



**விளம்பரம் செய்ய தொடர்புக்கு...**

திருத்தலக்கடை : 04639 -261330
திருத்தல அலுவலகம் : 04639 -261430


## மலரின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| திருப்பாடல்கள் அறிமுகம் | 2 |
| ரூத்து | 5 |
| எங்கள் சந்தோஷத்தின்... | 7 |
| திருச்சபை செய்திகள் | 12 |
| 3 வகை மனிதர்கள் | 15 |
| சிலுவை திருச்சிலுவை | 17 |
| அற்புதங்கள் சாட்சிகள் | 19 |
| கவிதைச் சோலை | 20 |
| எனது கிராமம் | 24 |
| உணவே மருந்து | 27 |
| திருவிவிலியம் நமது செல்வம் | 32 |



வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100



# ஆசிரியரின் அருளுரை

இயேசுவில் அன்புக்குரியவர்களே! திருக்கல்யாணத் தாயின் அருமையான பிள்ளைகளே

மீண்டும ஒரு முறை திருக்கல்யாணத் தாய் மாத இதழ் மூலமாய் உங்களுடன் தொடர்புகொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அக்டோபர் மாதம் என்றவுடன் உடனடியாக நம் நினைவுக்கு வருவது செபமாலைதான். செபமாலை மாதம் என்று அழைக்கப்படும் அக்டோபர் மாதத்தின் ஏழாம் நாள் செபமாலை அன்னையின் விழாவை நம் தாய் திருச்சபையுடன் இணைந்து நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம். செபமாலை செபிக்கும் வழக்கம் திருச்சபையில் இடைக்காலத்தில் தோன்றியது. அதை செபிக்கும் முறையில் படிப்படியாக மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

முதலாவதாக, கி.பி.12ஆம் நூற்றாண்டில் அருள் நிறைந்த மரியே என்கிற செபத்தை மீண்டும் மீண்டும் சொல்லி, அன்னை மரியாவின் ஐந்து மகிழ்ச்சியான நேரங்களைப் பற்றிச் சிந்திக்கும் பழக்கம் ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியான தருணங்கள் பின்வருமாறு, 1. மரியாவுக்கு மங்கள வார்த்தை 2. இயேசுவின் பிறப்பு 3. அவரது உயிர்ப்பு 4. அவரது விண்ணேற்றம் 5. மரியாவின் விண்ணேற்பு. கி.பி. 13 மற்றும் 14-ம் நூற்றாண்டுகளில் பிரான்சிஸ்கன் சபையினரும் மரியின் ஊழியர் சபையினரும் தூயரின் 5 மறைஉண்மைகளைப் பற்றியப் பக்தியை வளர்த்து பரப்பி பின்பு மரியாவின் 7 துயரங்களைப் பற்றிய பக்தியைப் பிரபலப்படுத்தினர். 14-ம் நூற்றாண்டில் செபமாலை என்றால் நற்சிந்தனைகள் அல்லது சிறிய கவிதைகளின் தொகுப்பு என்றும் கூறப்பட்டது.

கி.பி 15-ம் நூற்றாண்டில் 2 விதங்களில் செபமாலை செபிக்கும் முறை வழக்கத்திற்கு வந்தது. 1.கி.பி 1410-ம் ஆண்டளவில், கார்த்தூஸியனான தொமினிக்கின் செபமாலை அருள்நிறைந்த மரியே செபத்தை தொடர்ந்து 150 முறை சொல்லி அவ்வாறு சொல்லுகிற போது இடைஇடையே இயேசு மற்றும் மரியாவின் வாழ்க்கையிலிருந்து சில முக்கிய நிகழ்வுகளை நினைத்து அவற்றை பற்றி சிந்தித்து செபமாலை செபிக்கப்பட்டது. 2. தொமினிக்கன் சபையை சேர்ந்த அலைன் ரோச் என்பவர் கி.பி.1464-ம் ஆண்டில் வாக்கு மானிடரான நிகழ்வு, அவரது துன்பம் மற்றும் அவரது உயிர்ப்பு ஆகிய கிறிஸ்துவைக் குறித்த மறையுண்மையின் அடிப்படை அம்சங்களை நினைவூட்டும் விதத்தில் மகிழ்வின் மறை உண்மைகள் துயரின் மறை உண்மைகள் மகிமையின் மறை உண்மைகள் என 3-ஆக பிரித்து செபமாலையை செபிக்கும் முறையை அலைன்ரோச் அறிமுகம் செய்து வைத்தார். இவ்வாறு செபமாலையை செபிக்கும் முறை மிக விரைவில் பிரபலமானது.

கிறிஸ்தியலின் ஆழத்தை செபமாலை செபிப்பதின் மூலம் வெளிப்படுத்தும் விதத்தில் கி.பி.2002-ம் ஆண்டில் திருத்தந்தை புனித

2-ம் ஜான் பால் ஒளியின் மறைஉண்மைகளை அறிமுகப்படுத்தினார். இயேசுவின் பணி வாழ்வின் போது நிகழ்ந்த முக்கியமான 5 நிகழ்வுகளை இந்த மறை உண்மைகளில் காணலாம். தொகுப்பிற்கு 5 மறை உண்மைகள் வீதம் மொத்தம் 4 தொகுப்புகளாக கிறிஸ்துவை பற்றிய 20 மறை உண்மைகளை சிந்தித்து செபமாலையை செபிக்கும் முறை இப்போது வழக்கத்தில் இருக்கிறது. இந்த அடிப்படையில் செபமாலையை நற்செய்தியின் சுருக்கம் என்று குறிப்பிடலாம்.

செபமாலையை செபித்தல் என்றால் நமது மீட்புக்காக மனிதராய் பிறந்து சிலுவையில் அறையப்பட்டு, இறந்து, உயிர்த்த இயேசு கிறிஸ்துவைபற்றி அன்னை மரியாவுடன் இணைந்து சிந்தித்து தியானித்தல் என்று புரிந்துகொள்ளலாம். சாதாரண மக்கள் செபமாலையை நேசிக்கிறார்கள் என்பதற்கு மாற்றுக்கருத்து இல்லை. செபமாலையை செபிப்பதினால் நம் விசுவாசம் உறுதிஅடைகிறது. அன்னை மரியாவின் உயர்ந்த தாய்மைக் குணத்தை செபமாலை வெளிப்படுத்துகிறது. செபமாலை மறைபரப்பும் ஆற்றல் கொண்டுள்ளது. இவ்வளவு சிறப்புமிக்க செபமாலையை நாம் தொடர்ந்து செபிக்க முற்படுவோம். செபமாலையை நாளும் செபித்து நம் அன்னை மரியாவுடன் இணைந்து இயேசு கிறிஸ்துவை பற்றிய மறை உண்மைகளை சிந்தித்து நல்வாழ்வில் ஈடுபடுவோமாக!.

- அருட்திரு.முனைவர். R.**ஜோசப் ரவிபாலன்**
**திருத்தல அதிபர்**
திருக்கல்யாணமாதா திருத்தலம், பொத்தக்காலன்விளை.



# திருப்பாடல்கள் 2

முனைவர் அருட்திரு. **R.ஜோசப் ரவி பாலன்**

இரண்டாம் திருப்பாடல் ஓர் அரசப்பாடல் ஆகும். யூதா என்கிற தென்னாட்டில் தாவீதின் மரபில் வந்த அரசர் ஒருவரின் முடிசூட்டு விழவின் போது இப்பாடல் இசைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள சில வார்த்தைகளும் பதங்களும் இப்பாடலை முதல் திருப்பாடலோடு இணைப்பதாக விவிலிய அறிஞர்கள் கருதுகின்றனர். திபா 12-ல் இறைவன் அருளிய திருச்சட்டத்தைப் பற்றிய சிந்தனை அடங்கியிருப்பது போல இப்பாடலில் (திபா 2:1) வீணானச் சூழ்ச்சி பற்றி சுட்டிக் காட்டப்படுகிறது. முதல் திருப்பாடலின் முடிவில் (2:12அ) குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம் நற்பேறு பெற்றவர் குறித்து இரண்டு பாடல்களிலும் காணமுடிகிறது திபா 1:1இல் "நற்பேறுபெற்றவர்" குறித்து இரணடுபாடல்களிலும் காணமுடிகிறது திபா 1:1இல் "நற்பேறு பெற்றவர்" ஒருமையில் குறிப்பிடப்பட்டுள்ளது திபா 2:12இல் அச்சொற்றொடர் பன்மையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மெசியா பற்றியச் செய்தியை வழங்கும் நோக்கில் இரண்டாம் பாடல் திருப்பாடல்கள் நூலில் தொடக்கத்திலேயே இணைக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்படுகிறது, இது இறைவனால் திருப்பொழிவு செய்யப்பட்ட ஓர் அரசனைக் குறித்தப்பாடல் என்பதில் ஐயமில்லை மண்ணக அரசனைப் பற்றிப் பாடுவதாக உணர்த்தும் இப்பாடல் உண்மையில் எதிர்காலத்தில் இறைவனால் அனுப்பப்படப் போகிற மெசியா அரசனைக் குறித்தப் பாடல் என்று யாரும் எளிதில் சொல்லிவிடலாம். இது மெசியா யேசுவைக் குறித்து எழுதப்பட்டுள்ளப் பாடல் என்று கிறித்தவ அறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்றார். இப்பாடலின் தொடக்க வரியிலேயே, இறைவனுக்கு அவரால் அனுப்பப்படும் மெசியாவிற்கும் எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அனைத்து நாடுகளுக்கும், அனைத்து அரசர்களுக்கும் சவால் விடுத்து கேள்விகள் எழுப்புவது போல எழுதப்பட்டிருக்கிறது


தாவீது இஸ்ரவேலின் மன்னராக முடிசூட்டப்படுதல்

இப்பாடல் அடங்கியுள்ளக் கருத்துக்களின் அடிப்படையில் இதை நான்கு பிரிவுகளாய் பிரிக்கலாம் 1. இறைவனுக்கும், அவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவருக்கும் எதிராக பிற இனத்தாரும், அவர்களின் அரசர்களும் சூழ்ச்சி செய்தல் (1-3): 2. அவர்களின் சூழ்ச்சிக்கும் எதிர்ப்புக்கும் இறைவன் தரும் பதிலடி (4-6): 3 திருப்பொழிவு செய்யப்பட்டவரின் உரை (7-9): 4. கிளர்ச்சி ஒடுக்கப்பட்டபின், யூதாவின் மன்னன் தோற்றுப் போன மன்னர்களுக்கு வழங்கும் அறிவுரை (10-12).


இப்பாடலின் முதலாம் பிரிவை ஆய்கிறபோது சில உண்மைகளை நாம் அறிய முடிகிறது. கடவுள்தான் இஸ்ரயேலின் அரசர் என்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை மக்களின் நச்சரிப்பின் காரணமாக அவர்களுக்கு ஓர் அரசனைகடவுள் வழங்கினார் (காண்க 1சாமு 8-9) அப்படியே மன்னராட்சி இஸ்ரயேல் சமுதாயத்தில் நிலைகொண்டது இஸ்ரயேலரின் மன்னன் யாராக இருந்தாலும் அவரை இறைவன் தம் மகன் என்று அங்கீகரித்தார். மன்னன் கடவுளின் மண்ணகப் பிரநிதியாய் செயல்பட வேண்டி யிருந்தது. இஸ்ரயேலின் மன்னன் இறைவனுக்குப் பிரமாணிக்கமுள்ளவராக இருந்தால் அவரையும் இஸ்ரயேல் நாட்டையும் ஆண்டவர் எதிரிகளிடமிருந்து காத்து வழிநடத்துவார் என்கிற உண்மையை இஸ்ரயேல் மக்கள் உணர்ந்திருந்தனர். பிற்காலத்தில் இஸ்ரயேல் நாட்டையும் ஆண்டவர் எதிரிகளிடமிருந்து வழங்கப்படும் மெசியாவை (காண்க. 2சாமு 7) நினைவூட்டும் வகையில் மன்னர்கள் திகழவேண்டும் என்று அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டது.

மானிடரின் முரண்பாடான செயல் கேலிக்குரியதாகக் கடவுளுக்குத் தோன்றுகிறது. அதனால் கடவுளின் கோபம் அதிகரிக்கிறது சீயோனில் (சீயோன் என்றால் எருசலேம் அல்லது எருசலேம் ஆலயம்) தம் மண்ணக ஆட்சிப்பீடத்தை உருவாக்கி, அதில் மனிதனை அரசனாக நியமித்து ஆட்சி செய்து வரும் கடவுள் தன்னால் நியமிக்கப்பட்ட அரசனைஎதிர்த்து நிற்பவர்களை அழிப்பார், இவ்வுண்மையை நாம் சிந்திக்கிறபோது, தாவீது மற்றும் சாலமோன் அரசர்களின் காலம்தான் நமக்கு நினைவுக்கு வருகிறது (கிமு 1000-930) அவ்விருவரின் காலத்தில் இஸ்ரயேல் நாடு பரந்து விரிந்து கிடந்தது. பல சிற்றரசர்கள் இஸ்ரயேலுக் கப்பம் கட்டினர். அவர்களுள் சிலர் இதனிடையே இஸ்ரயேலுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். தாவீது, சாலமோன் காலத்திற்குப் பிறகு இத்திருப்பாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிகழ்வு நடந்தது என்று எடுத்துக்கொண்டால், அது இஸ்ரயேலின் கடவுளையும், அவரால் திருப்பொழிவு செய்யப்பட்ட மெசியாவையும்தான் குறிக்கிறது என்று அர்த்தமாகும். இன்னொன்றையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். கடவுளின் பிரநிதியாகிய இஸ்ரயேலின் மன்னனுக்கு எதிராக உருவாக்கப்படும் கலகம் கடவுளுக்கு எதிரான கலகமாகவே அறியப்படுகிறது.


இரண்டாவது பிரிவில், காட்சியின் இடம் மண்ணுலகிலிருந்து விண்ணுலகத்திற்கு மாறுவதைப் பார்க்கிறோம் மண்ணகத்தில் கடவுளின் அடியாருக்கு எதிராக நடைபெறும் சூழ்ச்சிகள் எதிர்ப்புக்கள், கலகங்கள் ஆகியவற்றை விண்ணகத்திலுள்ள கடவுள் எள்ளி நகையாடி, தம் பெருஞ்சினத்தை வெளிப்படுத்துகிறார் (காண்க திபா 59:9) மேலும் சீயோன் என்கிற புனித இடம் மற்றும் தாவீது குடும்பத்தினரின் அரசுரிமை ஆகியவற்றைத் தேர்ந்துகொண்டவர் கடவுள்தான் என்பதும் இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது (திபா 2:6: மேலும் காண்க 132:11-14)

மூன்றாவது பிரிவில், கடவுளின் பிரநிதியாகிய மன்னன் பேசுவதைக் காணலாம். "நீர் என் மைந்தர்: இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன்" என்று கடவுள் மன்னனிடம் சொல்லி, அவரைப் பெருமைப் படுத்தியதை மேற்கோள் காட்டி மன்னன் பேசுவதை அறிகிறோம்.

நான்காவது பிரிவாகிய இறுதிப் பிரிவில் குறுநில மன்னர்களின் கலகமும், சூழ்ச்சியும் அழிக்கப்பட்ட நிலையில், வீழ்த்தப்பட்டபவர்களுக்கு மன்னன் நல்ல அறிவுரைகள் சொல்வதைப் பார்க்கிறோம். கலகம் புரியும் மன்னர்கள் விவேகமாக நடக்க வேண்டும் என்றும், இறையச்சம் கொள்ள வேண்டும் என்றும், உண்மையான முறையில் கடவுளை வழிபாடு, அவருக்குத் தகுந்த ஊழியம் புரிய வேண்டும் என்றும், அறிவுரை கூறுவதைப் பார்க்கிறோம். கடவுளிடம் பணிந்து நடப்பவர்கள் கடவுளின் பிரதிநிதியாகிய மன்னனிடம் பணிந்து நடப்பவர்கள் பேறுபெற்றோர், இல்லையேல் அவர்கள் அழிவை நோக்கிச் செல்வர் என்றும் இப்பாடல் கூறுகிறது தாவீதின் மரபில் மெசியா தோன்றுவார் என்பது பழைய ஏற்பாட்டுப் படிப்பினை, தாவீதின் மகனாகிய இயேசுவும் அரசரே. மெசியா இயேசு என்கிற அரசருக்கு எதிராகச் செய்யப்படும் கலகங்கள் சூழ்ச்சிகள் விண்ணகக் கடவுளால் முறியடிக்கப்படும் என்பது இப்பாடல் உணர்த்தும் பாடம்.



# ரூத்து



அந்நிய ஜனத்தைச் சார்ந்த மோவாபிய பெண் ரூத் எப்படி இயேசுவின் மூதாதயர் பட்டியலில் இடம்பெற்றாள் என்பதை சுருக்கமாக பார்ப்போம்.

யூதாவில் உள்ள பெத்லகேமிலே பஞ்சம் உண்டான போது பஞ்சம் பிழைக்க எருசலேமுக்கு தன் மனைவி நகோமி தன் இரண்டு ஆண் பிள்ளைகள் மக்லேன், கிதியோன் ஆகியோரோடு மோவாபு நாட்டுக்கு சென்று வாழ்ந்து வந்தார். அங்கு எலிமலேக்கு மரித்த பிறகு தன் இரண்டு ஆண் பிள்ளைகளும் மோவாபு நாட்டு பெண்களான செர்பா, ரூத் ஆகியோரை மணந்து கொண்டனர். ஏறத்தாழ 10 ஆண்டுகள் கழித்து மக்லேன், கிதியோன் இறந்து போக நகோமி தன் இரண்டு மருமகளோடு தனிமையாய் வாழ்ந்து வந்தாள்.

ஆண்டவர் தன் மக்களை கருணையுடன் கண்ணோக்கி யூதாவில் உள்ள பெத்லகேமிலே அவர்களுக்கு உணவு கிடைக்கும்படி செய்தார் என்று நகோமி கேள்விப்பட்டதும் மோவாடி நாட்டை விட்டு புறப்பட்டு போக ஏற்பாடு செய்தால். மருமக்கள் இருவரும் நகோமியுடன் பயணமானார்கள். வழியில் நகோமி "நீங்கள் இருவரும் உங்கள் தாய் நாட்டுக்கு திரும்பி சென்று மணம் செய்து நலமுடன் இல்வாழ்க்கை நடத்த ஆண்டவர் அருள்புரிவாராக" என்று சொல்லி அணைத்து இருவரையும் முத்தமிட்டாள். மருமகள்கள் இருவரும் கதறி அழுது "இல்லை அம்மா நாங்கள் உம்மோடு வந்து உம் இனத்தாரிடையே இருப்போம்" என்றார்கள்.

நகோமி "மக்களே திரும்பி செல்லுங்கள் என்னோடு வருவதால் உங்களுக்கு என்ன பயன்– ஆண்டவர் என்னை பெரும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளார் உங்களுக்கு நேர்ந்தவற்றிற்காக நான் வருந்துகிறேன்" என்றால். அதைக் கேட்டு மருமகள் செர்பா கதறி அழுதுவிட்டு மாமி நகோமிக்கு முத்தம் கொடுத்து விட்டு திரும்பி சென்றாள. ஆனால் "ரூத்" பிரிந்து போக மறுத்துவிட்டாள்.

நகோமி ரூத்திடம் செர்பா தன் இனத்தையும், தன் தெய்வத்தையும் நோக்கி திரும்பி போய்விட்டாள். நீயும் திரும்பி போ என்றாள். அதற்கு ரூத் என்னை வற்புறுத்த வேண்டாம் உம்முடைய இனமே என் இனம் உம்முடைய தெய்வமே எனக்கும் தெய்வம். சாவிலும் உம்மை பிரியேன். அப்படி பிரிந்தால் ஆண்டவர் என்னை தண்டிப்பாராக என்றாள். அவர்கள் இருவரும் பெத்லகேம் வந்த போது ஊர் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டது.

நகோமிக்கு தன் புருஷன் எலிமனேக்கின் வழியில் "போவாஸ்" என்ற செல்வ செழிப்புள்ள ஒருவர் இருந்தார். இது வாற்கோதுமை அறுவடை காலமானதால் ரூத் தன் மாமி நகோமியுடன் அனுமதி பெற்றுக்கொண்டு வயலுக்கு போய் அறுவடையாள்கள் பின்னால் சென்று சிந்திய கதிர்களை பொறுக்கி சேர்த்தாள். ஞானமுள்ள பெண்கள் தம் இல்லத்தை கட்டி எழுப்புகின்றனர். அறிவற்றோரோ தங்களை கொண்டே அதை அழித்து விடுகின்றனர். (நீதி 14 – 1) அந்த வயல் போவாஸ்க்கு சொந்தமானது என்று ரூத்துக்கு தெரியாது. போவாஸ் தன்னுடைய



அறுவடையாட்களின் கண்காணியிடம் "இவள் யார் வீட்டு பெண்- ரூத்" என்பதை தெரிந்து கொண்டான்.

போவாஸ ரூத்திடம் "பெண்ணே, நான் சொல்வதை கேள் இந்த வயல் தவிர வேறு எந்த வயலுக்கும் போய் நீ கதிர் பொறுக்க வேண்டாம் என் வயலில் கதிர் பொறுக்கும் மற்ற பெண்களோடு இருந்து அவர்கள் தண்ணீர் அருந்தும் பாண்டங்களில் இருந்து தண்ணீர் அருந்து என்றான். அதற்கு ரூத், போவாஸின் பாதங்களில் விழுந்து வணங்கி அயல்நாட்டு பெண்ணாகிய என்னிடம் ஏன் இவ்வளவு பரிவு, கருணை என்று கேட்டாள். அதற்கு போவாஸ், உன் கணவர் இறந்ததிலிருந்து உன் மாமியாருக்கு நீ செய்த அனைத்தையும் கேள்விப்பட்டேன். நீ உன் தாயையும், உன் தந்தையையும் சொந்த இனத்தையும் மறந்து என் இனத்தாராகிய நகோமியுடன் வந்திருக்கிறாய் என்றான். இஸ்ரவேலின் கடவுளான ஆண்டவர் உனக்கு முழு நிறைவான பலனை அருள்வார் என்றான்."

அன்று மாலை வரை கதிர் பொறுக்கி சேர்த்து விட்டு ரூத் வீட்டுக்கு சென்று நகோமியிடம் நடந்ததை சொன்னாள். நகோமி நம்மை காப்பாற்றும் கடமையுள்ள முறை உறவினருக்குள் போவாசும் ஒருவன் என்று பதிலளித்தாள்.

போவாஸ் பொதுமன்றம் கூடும் நகரவாயிலுக்கு சென்று ஊர் பெரியவர்களையும் எலிமலேக்கின் முக்கிய உறவினர் ஒருவரையும் வரவழைத்து நம் நெருங்கின உறவினரான எலிமலேக்கு சொந்தமான ஒரு துண்டு நிலத்தை நகோமி இப்போது விற்க போகிறாள் என்றும், அதை மீட்டும் உரிமை முதலில் உமக்கும், பின்னம் எனக்கும் உண்டு வேறு ஒருவருக்கும் இல்லை என்றான். அந்த முக்கிய முறை உறவினர் என்னால் நிலத்தை வாங்க முடியாது என்று சொல்லி அதை வாங்கும் உரிமையை போவாசுக்கு தன் காலணியை கழற்றி கொடுத்து இஸ்ரவேலரிடமிருந்த பண்டைய கால மரபை உறுதிப்படுத்தினான்.

பின்னர் போவாசுக்கு நகரவாயிலிருந்த பெரியவர்கள் சாட்சியாக அந்த நிலத்தை நான் வாங்கி கொள்கிறேன் என்றும் அதை மீண்டும் நகோமியிடம் கொடுக்கிறேன் என்றும் மோவாபிய பெண் ரூத்தை என் மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன் என்றும் கூறி ரூத்தை மணந்து கொண்டான். ஆண்டவர் அவர்கள் கூடி வாழ்ந்த போது கருத்தரிக்க அருள் கூர்ந்தார். ரூத் ஓபேத் என்ற ஆண் மகனைப் பெற்றாள். பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம். திருப்பாடல் 127-3. ஓபேத் ஈசாயை பெற்றான். (மத் 1:5-16) ஈசாய் தாவீது ராஜாவை பெற்றான். பின்னர் இந்த சந்ததியில் யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்தவரே கிறிஸ்து என்னும் இயேசு.

-**ரா. பங்ராஸ்,** ஆசிரியர், பொற்பை

# எங்கள் சந்தோசத்தின் காரணமே!



நாம் வாழும் இந்த சமூகத்திலே ஒரு சில நபரைப் பார்த்தாலே அல்லது நினைத்தாலே போதும் நம் மனதில் பட்டாம்பூச்சி பறக்கும் சூரியனைக் கண்ட பனிபோல நம் சோகங்கள் மறைந்து அனைத்தும் சுகமாக மாறும் அதே போல, நமக்குப் பிடிக்காத சில நபரை அல்லது செய்திகளைப் பார்த்தாலோ அல்லது நினைத்தாலோ, நம் சந்தோசம் எல்லாம் நீரில் போட்ட கோலம் போலவும், பனிக்கட்டியில் எழுதிய வரிகள் போலவும் மாயமாய் மறைந்துவிடும். இவ்வாறு நாம் பார்க்கும் போது அன்னை மரியாவின் தரிசனம் அல்லது அவரைப் பற்றிய நினைவு நமக்குச் சந்தோசத்தைத் ;தருவதாக அமைகிறது. இதனால்தான் அன்னை மரியா, எங்கள் சந்தோசத்தின் காரண மே எனப் புகழப்படுகிறார். இதை ஆங்கிலத்தில் Cause of our Joy எனவும், இலத்தின் மொழியில், nostrae Laetitiae எனவும் அழைக்கிறோம். விவிலியப் பின்னணியின் படியும் கிறிஸ்தவ மரபுப்படியும் அன்னை மரியாவை எங்கள் சந்தோசத்தின் காரணமே என அழைக்கப் பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக மரியா நாசரேத்தில் இருந்து வந்த முதல் நல்லவர். ஏனெனில், நாசரேத்து என்ற ஊர் நல்லது எதையும் தராது என்ற எண்ணம் யூதர்கள் மத்தியில் இருந்தது எனவேதான், நத்தனியேல், நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வர முடியுமோ– என்று கேட்கிறார் யோவா 1:46).

இரண்டாவதாக மீட்புத் திட்டத்தில், வாக்கு மனிதனானதில் (யோவா 1:1) பெரும்பங்கு வகித்து இறைவனோடு தன்னையே ஐக்கியப்படுத்திக் கொண்டார் இதனால் சாதாரண நாசரேத்தின் மரியம் (எபிரேயம்), தூய மரியாவாக மாற்றம் பெற்றார்.

மூன்றாவதாக பழைய ஏற்பாட்டில் ஆதாம் - ஏவாளின் கீழ்ப்படியாமை நமக்கு சாவை பாவத்தை மற்றும் துன்பத்தைக் கொடுத்தது (தொ.நூ. 3:17 - 19) பாவத்துக்குக் கிடைக்கும் கூலி சாவாக இருந்தது (உரோ 6:23) புதிய ஏற்பாட்டில் புதிய ஏவாளாகிய மரியாவின் ஆமென் அல்லது உம் வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும் (லூக் 1:38) என்ற சொல் புதிய ஆதாமாகிய இயேசுவை நமக்குப் பெற்றுத் தந்தது. இதன் மூலமாக சாவின் வெற்றி தகர்க்கப்பட்டது. சாவு முற்றிலும் ஒழிந்தது வெற்றி கிடைத்தது சாவே உன் வெற்றி எங்கே– சாவே உன் கொடுக்கு எங்கே– (1கொரி 15:54,55)Her 'Yes' broke the chains of death made of Eve's 'No'.

நான்காவதாக விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாம், இறைவனால் பழைய ஏற்பாட்டு மக்களுக்கு ஆசியாக ஏற்படுத்தப்பட்டார். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன் நீயே ஆசியாக விளங்குவாய் (தொ.நூ. 12:2) அது போல, புதிய

ஏற்பாட்டில், அன்னை மரியா, நமக்கு ஆசியாக இருக்கிறார்.

ஐந்தாவதாக பழைய ஏற்பாட்டில் மோயீசன் இஸ்ரயேல் மக்களை அரசியல் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க அழைக்கப்பட்டார் (வி.ப. 3:7 - 12) புதிய ஏற்பாட்டில் நம் அன்னை மரியா நம்மையெல்லாம் அகவிடுதலைக்கு அழைத்துச் செல்ல பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து மீட்க புதிய மோயீசனாக இயேசுவை நமக்குப் பெற்றுத் தந்து இருக்கிறார் அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார் அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர் ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார் (மத் 1:21).

ஆறாவதாக அன்னை மரியா ஒரு நல்ல முன் மாதிரியான தாயாக, தன் குழந்தையின் மேல் அன்பும் அதே சமயம் கண்டிப்பும் கொண்ட தாயாக இருந்து மற்ற தாய்மார்கள் அனைவருக்கும் முன் மாதிரியான தாயாக விளங்குகிறார். மகனே ஏன் இப்படி செய்தாய்- இதோ பார் உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டிருந்தோமே (லூக் 2:48).

ஏழாவதாக அன்னை மரியா இயேசு மீது மட்டும் அக்கறை கொண்டவராக மட்டும் இல்லாமல் அனைத்து மனிதர்கள் மீதும், குறிப்பாக ஏழைகள் மீது அக்கறை கொண்டவராக மக்களின் தேவையைத் தன் மகனிடம் கூறி அவைகளைப் பூர்த்தி செய்பவராக இருக்கிறார் (யோவா 2:1 - 14 - கானாவூர் திருமணம்). இறுதியாக, கல்வாரியில் தன் மகனை நமக்காகத் தியாகம் செய்ததோடு மட்டுமில்லாமல், நமக்கெல்லாம் தாயாக, இயேசுவின் மறையுடலான திருச்சபையின் தாயாக இருக்கிறார். இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம் அம்மா. இவரே உம் மகன் என்றார் பின்னர் தம் சீடரிடம் இவரே உம் தாய் என்றார் (யோவா 19:26 - 27). ஆக மரியா மாபெரும் மகிழ்ச்சியைத் தரும் தாயாக இருக்கிறார் (லூக் 2:10) இந்த மகிழ்ச்சி சந்தோசம், பரிசுத்த ஆவியின் கனிகளில் ஒன்றாக இருக்கிறது (கலா 5:22) இந்த சந்தோசம் பிறரையும் சந்தோசமாக வைத்திருக்கும் ஒன்றாக இருக்கிறது (காண்க : எஸ்தர்10:1 -10) நெகே 12:43) எனவே தான் மரியா எலிசபெத்தைச் சந்தோசத்துடன் வாழ்த்தியபோது, அவர் வயிற்றிலிருந்து குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று (லூக் 1:41).

அன்னை மரியாவைப் போல இறைவனின் திட்டத்திற்கு ஆமென் என்று கூறினால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும் (யோவா 16:20) என்பதில் ஐயமில்லை அப்போது தாயைப் போல பிள்ளைகளாகிய நாமும் பிறருக்கு மகிழ்ச்சியையும் சந்தோசத்தையும் தருவோம் என்பது உறுதி.

எங்கள் சந்தோசத்தின் காரணமே - எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

**- தாயே எங்கள் தஞ்சம்**



## வரவேற்கிறோம்!

பொத்தக்காலன்விளை புனித திருக்கல்யாணமாதா திருத்தலத்தில் உதவி பங்குத் தந்தையாக பணியாற்ற வருகை தந்துள்ள அருள்திரு. பிரான்சிஸ் வசந்தன் அவர்களை பங்குத் தந்தை சார்பாகவும், ஊர் மக்கள் சார்பாகவும் அன்புடன் வரவேற்கிறோம்.

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**06-09-2014 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1181 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1043 பேர் |
| சுகப்பிரசவம் | - | 978 பேர் |
| நற்சுகம்பெற | - | 350 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 723 பேர் |
| தேவஅழைத்தல் | - | 433 பேர் |
| வேலைகிடைக்க | - | 2043 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 1973 பேர் |
| குடும்பசமாதானம் | - | 2179 பேர் |
| குடும்பநலன் | - | 894 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 425 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 568 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 623 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1246 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 739 பேர் |
| மனமாற்றமடைய | - | 767 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1453 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 893 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 1005 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 1732 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 645 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** **- பங்குத்தந்தை**

**உங்கள் ஜெப உதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

# யார் பக்கம் யார் இருக்கவேண்டும்...

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ஒரு முக்கிய பிரச்சனையைத் தீர்க்க வழி தெரியாமல் குழம்பிக்கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த நண்பர் அவருக்கு உதவ முன்வந்தார். ஆனாலும் அந்த பிரச்சனைக்கு ஒரு வழியும் கிடைக்கவில்லை. நண்பர் ஆறுதலுக்காக குழம்பிக் கிடந்த லிங்கனிடம் நண்பரே கவலைப்படாதிருங்கள். கடவுள் உங்கள் பக்கம் இருப்பார் என்றார். அந்தக் குழப்பத் திலும் லிங்கன் அவரிடம் அவர் என் பக்கம் இருக்கவேண்டுமென்பது என் ஆசையல்ல; நான் அவர் பக்கம் இருக்கவேண்டும் அது தான் என் ஆசை என்று அமைதியாக பதிலுரைத்தார்.

– **மனோ ராயன்,** திசையன்விளை

# இளையோருக்கு வழிகாட்டும் திருவிவிலியம்




**தாழ்ச்சி:-** "மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாக தொண்டு ஆற்றுவதற்கே வந்தார்." மாற்கு 10:4 என்று தாழ்ச்சியோடு பிறருக்கு பணிபுரிவதே கடவுள் விரும்பும் செயல் என இளையோர்களுக்குச் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே, இறைவன் முன் ஒவ்வொருவரும் மதிப்புமிக்கவன். இயேசுவைப் போல் தாழ்ச்சியோடு இளைஞர்கள் வாழ வேண்டும்.

**அன்பு:-** அன்பின் உச்சக்கட்டமாக இயேசு நற்கருணையை ஏற்படுத்தினார். இயேசு கொடுத்த அன்புக் கட்டளையை இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். யோவான் 13:34ல் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்றக் கட்டளையை இக்கால இளைஞர்கள் உண்மையில் கடைப்பிடித்தால் வருங்காலத்தில் வன்முறை என்ற சொல்லுக்கே இடமில்லை.

**பணிவு:-** இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார். (லூக்கா 2:52). வானதூதர் அன்னை மரியாவிடம் தோன்றி மங்கல வார்த்தை சொன்னவுடன் மரியாள் நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே நிகழட்டும் என்று கூறினாள். (லூக்கா 1:38). இறைமகன் இயேசு அன்னை மரியாள் வேண்டுகோளுக்கு பணிந்து தண்ணீரை திராட்சை இரசமாக்கினார். (யோவான் 2:3-5). இவ்வாறு இறைமகன் இயேசுவும் மரியாயும் பணிந்து நடந்தது போல் இறையோராகிய நாமும் பணிந்து நடந்து வாழ வேண்டும்.

**ஏற்றத்தாழ்வுகள்:-** இயேசு வாழ்ந்த காலத்தில் கட்டளையைக் கடைப்பிடித்த இளைஞன் செல்வத்தைப் பகிர மனமில்லாது திரும்பிப் போனான். இளைஞன் நினைத்தால் இயலாதது ஏதும் இல்லை. ஆதலால் பகிரும்போது ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு மறைகிறது. மத் 25:34-36ல் இறையாட்சி ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இல்லாமல் இறைவனின் வருகையைக் கூறுகிறது. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர் மீது இயேசு அன்பு கொண்டார். விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண்ணை உயர்த்திப் பேசினார். இறைமகனே ஏற்றத்தாழ்வை ஒழித்தார். நாமும் தீர்மானம் எடுப்போம்.

**தியாகம்:-** மெழுகுவர்த்தி எரியும்போது இருள் மறைகிறது. ஒளி கிடைக்கிறது. பிறருடைய நல வாழ்விற்கு தன்னையே தியாகம் செய்யும் அன்பிற்கு மெழுகுவர்த்தியை எடுத்துக்காட்டாக கூறலாம்.

உலகமக்கள் அனைவரையும் மீட்க வேண்டும் என்ற இலட்சியத்திற்காக இயேசு வேதனைகளை பொறுமையாக தாங்கிக் கொண்டார். தம் கடைசி துளி இரத்தத்தையும் நமக்காக சிந்தி தம்மை அன்பு செய்தார். தம் நண்பருக்காக உயிர் கொடுப்பதை விட மேலான அன்பு வேறு எதுவும் இல்லை. (யோவான் 15:13) என்று இயேசு சொன்னதை வாழ்ந்து காட்டியது போல இளையோராகிய நாமும் பிறருடைய துன்பங்களை போக்க முயற்சி செய்ய வேண்டும்.

- **வி.சாந்தாதேவி,** தலைமை ஆசிரியை
புனித மரியன்னை துவக்கப்பள்ளி, பொற்பை

# சிலுவை அடியில்



தீராத நோய் தீர்த்திடும் திருச் சிலுவை!
தீர்க்கத்தரிசிகள் அறிவித்த தூய சிலுவை!
அருள் வழி காட்டிடும் திருச் சிலுவை!
அப்போஸ்தலர்கள் போதித்த தூய சிலுவை!
வந்திடும் சொற்கள் நலமாக – நாமும்
வரைவோம் திருச்சிலுவை நாவினில்!
நினைவெல்லாம் இனிதாய் அமைந்திடவே
நித்தம் வரைவோம் சிலுவை நெஞ்சினில்!
சிந்தனை சிறப்பாய் இருந்திட – நிதம்
சிலுவை வரைவோமே நெற்றியில்!
விண்ணரசை நோக்கிய நம் பயணம் இனிதாக
விருப்புடன் செல்வோம் திருச்சிலுவையின் பாதையில்!
இனிய வரங்கள் பெறுவோம், இறைவன் அரசில்!
இதய அமைதி பெறுவோம், திருச்சிலுவை அடியில்!

– **ம. மிக்கேல் உஷா**, பொற்பை



# பயணங்கள் முடிவதில்லை

ஏதாவது ஒரு செயலில் வெற்றி அடைந்ததும், திருப்தி உண்டாவது இயற்கையே. ஆனால் அந்த திருப்தி உங்களைத் தளர்த்திவிடக் கூடாது. ஒரு காரியத்தைச் சாதித்தால் ஏற்படும் உள்ள நிறைவே உங்களை ஓய்ந்து உட்கார்ந்து விடச் செய்யலாமா–

சாதனையால் கிடைத்த உற்சாகம் வற்றும் முன்பாகவே, அது தரும் ஊக்க சக்தியைக் கொண்டு வேறு செயலில் நாட்டமுடன் ஈடுபடுங்கள் வெற்றிக் களிப்பில் மிதக்கும்போதே, மற்றொரு இலக்கை நோக்கி நடைபோடத் திட்டமிடுங்கள்.

‘ கற்றது கை மண் அளவு; கல்லாதது உலகளவு’ என்று சொல்வது, செயலாக்கத்திற்கு ரொம்பப் பொருத்தம் ‘செய்தது சொற்பமே இன்னும் செய்ய வேண்டியது மிக அதிகம்’ என்ற எண்ணம் ஊற்று நீராக உங்கள் மனதாழத்தில் சுரந்து கொண்டே இருக்கும். மைல்கற்கள் எத்தனையோ கடந்தாலும் நடை தொடர வேண்டும். புதிய எல்லைகளைத்தொடும் துடிப்பு, தீராத தாகமாகவே இருக்க வேண்டும். இதில் சராசரி மனிதர், பிரமுகர் என்ற பாகுபாடுக்கு இடமில்லை. எவரானாலும் சரி, அவரவர் சூழ்நிலைக்கும், தேவைக்கும், தேடலுக்கும் ஏற்றவாறு, இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு தொடர்ந்து முயற்சி செய்தால் தகுதி தானே வந்தடையும். ஆசுவாசப்படுத்திக் கொள்வது என்ற பெயரால் அசதிக்கு இடம் தந்துவிட வேண்டாம் கொண்டாட்டம் என்று சொல்லிக் கொண்டு களைப்பிற்கு வகை செய்ய வேண்டாம்.

தொடர்ந்த இயக்கமே, மனித வாழ்க்கையின் உயிர்நாடி சுவாசமும், இதயத்துடிப்பும் நின்று போனால் ஜீவன் ஏது– சொகுசு, சுகம் என்ற நித்திரையில் மூழ்காமல், சுறுசுறுப்பாகப்பாகுங்கள் வெற்றிகள் உங்களைத் தொடரும்.

– **அமல பென்சி**, கொழுந்து நகர்

# திருச்சபைச் செய்திகள்

முனைவர் அருட்திரு. R.ஜோசப் ரவி பாலன்

1. புதிய புனிதர்களின் விழா நாள்கள்

கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் நாள் திருத்தந்தை ஃபிரான்சிஸ் முன்னால் திருத்தந்தையர்கள் இருபத்துமூன்றாம் ஜான் மற்றும் இரண்டாம் ஜான் பால் ஆகியோரை புனிதர்களாக அறிவித்தார் என்பது நமக்குத் தெரியும் இப்போது இந்த இரு புனிதர்களுடைய விழா நாள்களை அவர் அறிவித்திருக்கிறார். புனித இருபத்துமூன்றாம் ஜான் அக்டோபர் மாதம் 11ஆம் தேதியன்றும், புனித இரண்டாம் ஜான் பால் அக்டோபர் மாதம் 22ஆம் தேதியன்றும் ஆண்டுதோறும் கொண்டாடப்படுவர் இந்த இருவருக்கும் விழா (feast) என்றோ, கட்டாய நினைவு(Obligatory memorial) என்றோ அல்லாமல் விருப்ப நினைவு (Optional memorial). என்கிற அடிப்படையில் அவரவருக்குரிய வருடாந்திர நாள்களிலே திருச்சபையின் திருவழிபாட்டில் நினைக்கூர்ப்படுவார். இந்த இருவரோடும் சேர்ந்து திருச்சபையிலே இதுவரை முதல் திருத்தந்தை புனித பேதுரு நீங்கலாக பதினேழு திருத்தந்தையர் புனிதர்களாகி, திருச்சபையின் திருவழிபாட்டு பஞ்சாக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2. திருந்தந்தையின் துருக்கிப் பயணம்

வத்திக்கானின் செய்தித் தொடர்பான ஃபெடெர்க்கோ லொம்பார்டி திருத்தந்தை ஃபிரான்சிஸ் இந்த ஆண்டு நவம்பர் மாதம் இறுதியில் துருக்கி நாட்டிற்குப் பயணம் செய்வார் என்று உறுதிப்படுத்தினார். துருக்கி நாட்டு அதிபர் தய்யிப் எர்டோகன் திருத்தந்தைக்கு அழைப்புக் கடிதம் அனுப்பியதின் பேரில் திருத்தந்தை இந்த முடிவை எடுத்துள்ளார். எந்த நாளில் அங்கு செல்வார் என்பது பற்றியும் எத்தனை நாள்கள் அங்கே இருப்பார் என்பது பற்றியும் இன்னும் முடிவாகவில்லை என்று லொம்பார்டி கூறினார். இந்த பயணத்தின்போது துருக்கி நாட்டின் எல்லையில் தங்கியிருக்கும் ஈராக் நாட்டின் அகதிகளை திருத்தந்தை சந்திக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது.

3. விவிலிய விளக்கத்தின் நோக்கம்

செப்டம்பர் 12ஆம் நாள் திருத்தந்தை ஃபிரான்சிஸ் இத்தாலிய விவிலிய அமைப்பு ஏற்பாடு செய்த 43வது தேசிய விவிலிய வாரத்தில் கலந்துகொண்டவர்களைச் சந்தித்தார். இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்க ஏடுகளுள் ஒன்றான இறைவார்த்தை (Dei Verbum - Word of God) என்று தலைப்பிடப்பட்டுள்ள இறைவனின் வெளிப்பாடு (Divine Revelation) என்கிற மறைக் கொள்கைத் திரட்டு வெளியிடப்பட்ட ஐம்பதாம் ஆண்டு இந்தக் கூட்டத்தில் தொடங்கிவைக்கப்பட்டது விவிலியப் பகுதிகளுக்கு விளக்கம் தருகிற போது அதை விளக்குகிறவர் தூய ஆவியின் வழிநடத்துதலைப் பெறுவதற்கு தன்னை முற்றிலும் தாழ்த்திக் கொள்ளவேண்டும் என்று திருத்தந்தை கூறினார். அனைத்திற்கும் மேலாக விவிலியத்தை விளக்குகிறவர் விசுவாசம் கொண்டவராய் விளங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

4. புருண்டியில் அருட்சகோதரிகள் படுகொலை

சவேரியன் மறைபரப்பாளர்கள் (Xaverian Missionaries) சபையைச் சேர்ந்த மூன்று இத்தாலிய மூத்த சகோதரிகள் புருண்டி நாட்டின் தலைநகரமாகிய புஜும்பூராவில் இருக்கும் தங்கள் மடத்தில் கொல்லப்பட்டனர். அருட்சகோதரிகள் லூசியா புலிஸி (வயது 75), ஓல்கா ரஸ்கியத்தி (வயது 82), பெர்னதெத்தா போகியன் (வயது 79) ஆகியோர் செப்டம்பர் 7ஆம் நாள் இரண்டு வெவ்வேறு தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். கொலை செய்யப்பட்ட மூவரும் வடக்கு இத்தாலியைச் சேர்ந்தவர்கள், கொலைக்கான காரணம் இன்னும் சரியாகத் தெரியவில்லை ஆயுதம் ஏந்தித் திருடக்கூடிய மனநிலை பாதிக்கப்பட்டுள்ள ஒருவரால் இந்த கொலைகள் ஏற்பட்டிருக்கலாம் என்று இத்தாலியின் பார்மா மறைமாவட்டம் நம்புகிறது. இந்தக் கொலை சம்பந்தமாக ஒரு நபரை கைது செய்து செய்துள்ளதாகவும், அந்த நபர் தான் கொலை செய்ததாக ஒப்புக் கொண்டு விட்டதாகவும் ஒருவரது கைப்பேசியும் அந்த மடத்தின் சாவிகளும் இருந்ததாகக் காவல் துறை கூறுகிறது ஆனால் கொலை செய்யப்பட்ட சகோதரிகளின் சபை காவல் துறையின் பேச்சை நம்ப மறுக்கிறது காவல் துறையினால் சந்தேகிக்கப்படும் 33 வயது கிறிஸ்டியான் குலோது பூத்தோயி தன் குடும்கத்திற்குச் சொந்தமான நிலத்தில் மடம் கட்டப்பட்டுள்ளதால். அந்த மூன்று சகோதரிகளையும் தான் கொனடறதாக வாக்குமூலம் கொடுத்துள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன. ஆனால் இதை ஏற்க சவேரியன் மறைபரப்பாளர்கள் சபை மறுக்கிறது இவ்வளவு கொடூரக் கொலைகளை ஒரு தனி நபர் செய்தருக்க முடியாது என்பது அவர்களின் உறுதியான நிலை ஆண்டவர் தீர்ப்பளிக்கட்டும் இருப்பினும் எங்கள் பணியை நங்கள் தொடர்வோம் என்று அச்சபையின் முன்னாள் மாநிலத் தலைமைச் சகோதரி டீலியா கூறினார்.

5. ஒன்பது கர்தினால்களின் அமைப்பு

அகில உலகத் திருச்சபையை நன்கு வழி நடத்திட தனக்கு உதவி செய்வதற்காக கர்தினால்கள் ஒன்பது பேரை திருத்தந்தை ஃபிரான்சிஸ் நியமித்திருக்கிறார். கர்தினால்களின் இந்த அமைப்பில் வத்திக்கானின் வெளியுறவுச் செயலர் கர்தினால் பியேத்ரோ பரோலினையும் திருத்தந்தை சேர்த்துள்ளார் இந்த ஒன்பது காதினால்களின் அமைப்பு ஆறாவது முறையாக செப்டம்பர் 15 முதல் 17ஆம் நாள் வரை வத்திக்கானில் உள்ள புனித மார்த்தா இல்லத்தில் கூடியது இதற்கு முன்பு சென்ற ஆண்டில் அக்டோபர் 1 முதல் 3 வரையும், டிசம்பர் 3 முதல் 5 வரையும், நடப்பு ஆண்டில் பெப்ருவரி 28 முதல் மார்ச் 2 வரையும், ஏப்ரல் 1 முதல் 4 வரையும், ஜுலை 1 முதல் 4 வரையும் இந்த ஒன்பது கர்தினால்களின் அமைப்பு கூடியது.

6. புனித பேதுருவின் பேராலயத்தில் திருமணத் திருப்பலி

புனித பேதுரு பேராலயத்தில் செப்டம்பர் 14ஆம் நாள் கொண்டாடியத் திருப்பலியில் திருத்தந்தை ஃபிரான்சிஸ் இருபது தம்பதியர்களுக்கு திருமண அருளடையாளத்தை நிறைவேற்றினார். திருமணத் தம்பதியர் யாவரும் உரோமை மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அகில உலகத் திருச்சபையின் தலைவரகத் திருத்தந்தை விளங்கினாலும், அவர் பேதுருவின் வழியில் உரோமை நகரத்தின் ஆயர் என்பது குறிப்பிடத்தக்கது அகில உலக ஆயர்களின் பேரவையின் சிறப்புக் கூட்டம் வருகிற அக்டோபர் மாதம் 5ஆம் நாள் முதல் 19ஆம் நாள் உரோமையில்

நடைபெறவுள்ளது. இந்த சிறப்புக் கூட்டத்தில் விவாதிப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டக் கருத்து நற்செய்தியைப் பறைசாற்றும் சூழலில் குடும்பங்களை எதிர்நோக்கும் சவால்கள் என்பதாகும். திருமணத்தைப் பற்றியும் குடும்ப வாழ்க்கைப் பற்றியும் அகில உலக ஆயர்களின் பேரவை கருத்துப் பரிமாற்றம் செய்து விவாகத்தில் ஈடுபடுவதற்கு இன்னும் மூன்று வாரங்களே இருக்கும் இந்த வேளையில் திருத்தந்தை இருபது தம்பதியர்களின் திருமணத்தை நடத்தி வைத்தது சிறப்பானதும் அர்த்தமுள்ளதும் ஆகும்.

7. முதல் உலகப் போர் நூற்றாண்டு

முதலாம் உலகப் போர் தொடங்கி நூறாவது ஆண்டு நிறைவுறுவதையொட்டி செப்டம்பர் 13ஆம் நாள் வடக்கு இத்தாலியிலுள்ள சாக்ராரியோ தி ரெதிப்பூனியா என்கிற இடத்திற்கு திருத்தந்தை ஃபிரான்சிஸ் வந்தார். முதலாம் உலகப் போரில் இறந்தவர்களின் உடல்கள் இங்கே அடக்கம் செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்த இடம் முதல் உலகப் போரின் நினைவுச் சின்னமாகவும் விளங்குகிறது. இங்கே முதல் உலகப் போரில் மடிந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இத்தாலியப் படை வீரர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. அஞ்சலி செய்து செபித்தார். வடக்கு இத்தாலியப் பகுதிகள் அழகாக இருந்தாலும், ரெதிப்பூளியாவின் போர் நினைவுச் சின்னம் ஒரு சிந்தனையை நம் மனதில் உருவாக்குகிறது அதாவது போர் என்றாலே பைத்தியக்காரத்தனம்தான் என்று திருத்தந்தை கூறினார்.

8. திருத்தந்தையின் அல்பானியப் பயணம்

செப்டம்பர் 21ஆம் நாள் திருத்தந்தை ஃபிரான்சிஸ் அல்பானியா நாட்டிற்குச் செல்லவிருக்கிறார். இந்தப் பயணம் இத்தாலிக்கு வெளியே இவர் மேற்கொள்கிற நான்காவது சர்வதேசப் பயணம் ஆகும். இத்தாலி நீங்கலாக ஐரோப்பாவில் அவர் மேற்கொள்கிற முதல் பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

9. வத்திக்கான் மோட்டார் வாகனத்தில் போதைப் பொருள்


வத்திக்கான் பதிவு எண்ணைத் தாங்கிய மோட்டார் வாகனம் ஒன்று ஃபிரான்சு நாட்டின் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சாம்பெரி என்கிற இடத்திற்கு அருகில் சுங்க வரி அலுவலகர்களால் நிறுத்தப் பட்டது 4கிலோ நூற்றைம்பது கிராம் எடையுள்ள போதைப் பொருள்களைத் தங்களிடம் வைத்திருந்ததாக வாகனத்தில் இருந்த 41 வயதும் 30 வயதும் கொண்ட இரண்டு இத்தாலியர்கள் கைது செய்யப்பட்டனர் கைது செய்யப்பட்ட இருவரும் யார் என்று இன்னும் அடையாளம் காட்டப்படவில்லை வத்திக்கானில் வாழ்கிறவரோ அல்லது அங்கு பணி புரிபவரோ இந்தக் குற்றத்தில் ஈடுபடவில்லை என்று வத்திக்கான கூறியது அர்ஜெண்டீனாவைச் சேர்ந்த 91 வயதுடைய கர்தினால் ஜோர்ஜ் மேஜியாவுக்குச் சொந்தமான வாகனத்தில் இந்தக் குற்றச் செயல் நடந்துள்ளது. இந்த கர்தினாலுக்கு சில நாள்களுக்குமுன் மாரடைப்பு ஏற்பட்டு இப்போது அவர் ஓய்வில் இருக்கிறார். கர்தினாலின் செயலர் மோட்டார் வாகனத்ததைப் பழுது பார்ப்பதற்காக அந்த இரண்டு பேரிடம் அதைக் கொடுத்தார் என்றும், அவர்களிருவரும் அந்த வாய்ப்பைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர், என்றும் வத்திக்கானின் செய்தித் தொடர்பாளர் ஃபெடெரிக்கோ லொம்பார்டி கூறினார்.

# 3 வகை மனிதர்கள்

லூக்கா நற்செய்தி நூலில் காணப்படும் ‘ நல்ல சமாரியர் ’ பற்றிய உவமையின் மூலம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூன்று வகையான மனிதர்களை நமக்கு சுட்டிக்காட்டுகிறது. 1. கள்வர் 2. லேவியர் 3. சமாரியர்

## கள்வர்:

ஒரு மனிதன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் சென்று கொண்டிருந்தான். எருசலேம் கடவுளின் நகரம் எரிகோ பாவ நகரம். மனிதன் கடவுளை விட்டு விலகி பாவத்தை நோக்கிச் செல்லும் போது கவலை அவனை பிடித்துக் கொள்கிறது. கள்வர் அந்த மனிதனைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் அவனுடைய ஆடைகளை உரிந்து கொண்டார்கள் அவனை அடித்தார்கள். குற்றுயிராக விட்டுப் போனார்கள். இதை கள்வரைப் போன்ற குணமுடைய மனிதர்கள் இவ்வுலகில் உள்ளனர் பிறர் உடமையை விரும்பாதே என்பது பத்துக் கற்பனைகளுள் ஒன்று. அதை மீறினார்கள். களவு செய்யாதே என்னும் கற்பனையும் இங்கே மீறப்பட்டது. அவனை அடித்துக் காயப்படுத்தி, குற்றுயிராக விடுவது அடுத்த பாவம். இவ்வாறாக அடுக்கடுக்கான பாவங்களை, கொஞ்சமும் மனசாட்சி இன்றி சுயநலத்தோடு செய்யும் இரக்கமற்ற மனிதர்கள்.



## லேவியர் :




இறைபணிக்கென்றே தேர்ந்தெடுக்கப்பட்ட லேவியரும் அங்கு வருகிறார். ஆனால் குற்றுயிராய் கிடந்தவனைப் பார்த்ததும்முகத்தை மறுபக்கமாக திருப்பிக் கொண்டு இரக்கமில்லாமல் தன் வழியே நடந்து செல்ல ஆரம்பித்தார். இரக்கம் உடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்(மத். 5:7) என்னும் இறைவார்த்தையை அறியாதவர்கள் அல்ல அறிந்தும் அதை மறந்து போனார்கள்.

## சமாரியர் :

இவர்கள் யூதர்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் (யோவான் – 4:9) சமாரியன் ஒருவர் அங்கே வந்தார்

1. அவனைக் கண்டார்
2. பரிவு கொண்டார்
3. அவனை அணுகினார்
4. காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்துக் கட்டினார்
5. தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றினார்.
6. சாவடிக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்
7. அன்பு மனிதனைக் கவனித்துக் கொண்டார்
8. மறுநாள் வரை அந்த மனிதனோடு தங்கியிருந்தார்



9. இரு தெனாரியத்தை (பணத்தை) சாவடிப் பொறுப்பாளரிடம் கொடுத்தார்
10. அவனைக் கவனித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்
11. மறுபடியும் திரும்பிவருவதாக வாக்களித்தார்
12. அதிகம் செலவு ஆகுமேயானால் மீண்டும் வரும் போது தருவேன் என்று செலவு முழுவரையும் ஏற்றுக் கொண்டார்
13. மொத்தம் 13 நற்செயல்களைச் செய்துள்ளார்.

## நாம் யார்?

கள்வர்கள் முன் கூட்டியே திட்டமிட்டு பதுங்கியிருந்து வழிப்போக்கனை அடித்து களவு செய்தார்கள் இவர்கள் கற்பனையை லேவியரும் தற்செயலாக அங்கே வந்தார். அவர் மற்றவர் பொருளைத் திருடவில்லை. ஆனால் இரக்க உணர்வின்றி சுயநலத்தோடு செயல்பட்டார். இவரோ இறைவார்த்தையை அறிந்தவர்.

சமாரியார் தற்செயலாக அங்கே வரவில்லை. அவர் தமது விலங்கின் மீது ஏறி எங்கோ பயணம் செய்து கொண்டிருந்தவர். தமது சொந்த அலுவலை விட்டுவிட்டு ஓடோடி வந்தார். இறைவன் விரும்பும் நற்செயல்கள் 13 ஐ இவர் செய்தார். இவர் கற்பனையை அறியாதிருந்தும் இறைவன் திருஉள்ளப்படி செயல் பட்டார்.

இந்த மூவரில் நாம் யாரைப் போன்று இருக்கின்றோம்– நமது உள்ளம் எப்படி இருக்கின்றது. என்பதை சீர்தூக்கி சிந்திக்க வேண்டும்

## அடுத்திருப்பவர்யார்?

உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக இதில் 13 நற் செயல்களைச் செய்த சமாரியரே ‘அடுத்திருப்பவர்’ ஆவார்.

நம்மை நாம் அன்பு கூர்வது போல் கள்வர்கள் மேல் அன்பு கூற வேண்டியதில்லை. நம்மை நாம் அன்பு கூறுவது போல சுயநலமே உருவான மனிதர்கள் ( லேவியர்) மேல் அன்பு கூற வேண்டியதில்லை. நம்மை நாம் அன்பு கூறுவது போல நமக்கு அடுத்திருப்பவர் மேல் (சமாரிய் போல இரக்க உணர்வோடும், அன்போடும் வாழ்பவர்கள் மேல்) அன்பு கூற வேண்டும் இதுவே இறை உண்மை.

– P. **ஆல்வின் அண்ணாமலை** M.A., M.Ed., நெல்லை

# தித்திக்கும் மாலை ஜெபமாலை



அனைத்தும் அருளும் புனிதமும் சங்கமிக்கின்ற புனித நீரோடை அன்னைமரியாள். இறைவன் இப்புவிக்குதந்த அருள் பொழிந்திடும் பனி மாலை அன்னைமரியாள் ஏகமகனை சுமந்த ஞான அவயமானவர். ஆற்றல்மிகு வல்லமை மிகு சக்திவாய்ந்த ஜெபமாலை வாழ்வின் வழிகாட்டியாக விண்ணக வாயிலின் திறவுகோல் உலக உயிர்களுக்கு எல்லாம் ஜீவ சுவாசமானவர். கதிரவனை ஆடையாக அணிந்து வலம் வந்திடும் ஒளியானவர். அகிலமும் மணம் கமழ்ந்திடும் ரோஜா மலரானவர். அன்னைகரங்களில் தவழ்ந்திடும் முத்துசரமான ஜெபமாலை நம் அனைவருக்கும் பாசமாக அர்பணித்த ஜெபமாலை 13.10.1917ல் தன்னை ஜெபமாலை அன்னையாக வெளிபடுத்தியது. ஜெசிந்தா. லூசியா. பிரான்சிஸ்க்கு காட்சி தந்த இன்னாளும் புனித நாளானது.

– **செல்வம்மாள்,** பொற்பை



# சிலுவை திருச்சிலுவை

யோவான் 3-14 பாலை நிலத்தில் மோயீசனல் பாம்பு உயர்த்தப்பட்டது போல மாதுட மகனும் உயர்த்தப்பட வேண்டும் என்ற இறைவார்த்தையின் படியே இயேசு நமக்காக கல்வாரியில் சிலுவையில் அறையப்பட்டு உயர்த்தப்பட்டார். இயேசு சிவவையில் அறையப்பட்டால்தான் சிவவைக்கு மகிமைக்கு உண்டானது. திருச்சிலுவை தான் மநமக்கு மீட்பு. ஆனால் இன்று அநேகர் சிலுவையா! ஐயோ! எனக்கு வேண்டாம் என புலம்புகிறார்கள். சிவவை என்றால் இயேசு. இப்படி புலம்புபவர்கள் சிவவையின் எதிரிகள். ஆகவே திருச்சிலுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து இயேசுவுக்கு மகிமை சேர்ப்போம். அதனால்தான் சிலுவையைப் பற்றிய செய்தி அழிந்து போகின்றவர்களுக்கு மடமையே. ஆனால் மீட்பு பெறும் நமக்கோ கடவுளின் வல்லமை என கூறுகிறார் பவுலடிகள்.

இயேசு சிவவையில் அறையப்பட்டு வேதனையற்றுக் கொண்டிருந்த அந்த நண்பகல் 12 மணி முதல் 3 மணி வரை சிலுவையை சுற்றியிருந்த ஏழு வகையான கூட்டத்தைப் பற்றி சிந்திப்போம்.

**1. சிலுவையின் கீழே:**

யோவான் 19-23 படை வீரர்கள் இயேசுவின் அங்கியை சீட்டுப் போட்டு பகிர்ந்து கொண்டனர். இவர்கள் ஆதாயத்தை மட்டும் எதிர்பார்த்து நின்றவர்கள். இன்னும் கூட அநேகர் சிலுவையினால் எனக்கு என்ன கிடைக்கும் என ஆதாயத்திற்காக மட்டுமே ஆலய பணி செய்யக்கூடியவர்களாயிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் விபத்து நடந்த இடத்தில் உயிருக்குப் போராடுபவர்களின் உடமையை அபகரிக்கும் கொடூரமானவர்கள் புனித பவுல் பிலிப் 3-7ல் எனக்கு ஆதாயமான அனைத்தும் கிறிஸ்துவின் பொருட்டு இழப்பு எனக் கருதினேன் என்று கூறியது போல நாம் எப்போது நல்ல சமாரியனாக மாறப் போகிறோம்-

**2. சிலுவையின் மேலே:**

யோவான் 19:19-20 யுதரின் அரசன் என லத்தீன், கிரேக்க, அரேபிய மொழியில் எழுதப்பட்டிருந்த இயேசுவைப் பற்றிய குற்ற அறிக்கையை மக்கள் முன்னிலையில் வாசித்து பெருமை பாராட்டுகிறார்கள். அதிகார வர்க்கம் கொண்ட அதிகாரிகளும், ஞானிகளும். ஆக, இப்பேர்ப்பட்டவர்கள் தங்களைப் பெரியவர்களாக காட்டிக் கொள்ளும் அகம்பாவம் கொண்டவர்கள். இவர்களைப் போன்றே இன்றும் பிறரைப் பற்றி, இல்லாதது, பொல்லாததைக் கூறி, வார்த்தைகளைத் திரித்துப் பேசி அதிகப் பிரசங்கித்தனமாக நடந்து கொள்பவர்கள் நம்மில் இருக்கின்றனர். 1 கொரி. 4-10 கிறிஸ்துவின் பொருட்டு மடையர்கள், மதிப்பற்றவர்கள், வலுவற்றவர்கள் நாங்கள் எனக் கூறுகிறார் புனித பவுல். நாம் பவுலடிகளைப் போல் நம்மைத் தாழ்த்திக் கொள்வது எப்போது- தாழ்ச்சியடையோர் வீழ்ச்சியடையார் என்பதை உணருவது நாம் எப்போது-

**3. சிலுவையின் இருபுறம்:**

மத். 27:44 சிவவையில் அறையப்பட்டிருந்த கள்வரும் இயேசுவை இகழ்ந்தார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் சிறு துன்பம் வந்தாலும் உடனே கடவுளைத் திட்டுவார்கள். தி.பாடல் 10-11 இறைவன் மறந்து விட்டார். தம் முகத்தை மூடிக் கொண்டார். என்றுமே பார்க்க மாட்டார் என பொல்லார் சொல்வர் என்று தாமிது நமக்குச் சொல்கிறார். இறைவன் இரக்கம் நிறைந்தவர் என்பதை நாம் எப்போது உணரப் போகிறோம்- துன்பத்தின் வழியாகத்தான் இறைவனை அடைய முடியும் என்பதை நம்மில் எத்தனை பேர் நம்புகிறோம்-

**4. சிலுவையின் வழியே சென்ற வழிப்போக்கர்கள்:**

மாற்கு 15:29-30 அவ்வழியே சென்றவர்கள் தங்கள் தலையை அசைத்து ஆகா, மூன்று நாளில் கட்டி எழுப்புகிறவனே! சிவவையிலிருந்து இறங்கி வா ! என பழித்துரைத்தார்கள். இவர்களைப் போன்றே இன்றும் அநேகம் பேர் தேவையற்ற வார்த்தைகளைப் பேசி, வீண் வம்பை விலைக்கு வாங்குவார்கள். இவர்கள் எப்போதும் அடுத்தவர்களைப் பற்றியே, சிந்தித்து, பழி பாவத்திற்கு அஞ்சாதவர்கள். பயனற்ற சொல் பேசும் நாமும் நிச்சயம் ஒரு நாள் கடவுளுக்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்று உணர்ந்ததுண்டா-

**5. சிலுவையின் எதிரில்:**

மாற்கு 15:31 தலைமைக் குருக்கள் மறைநூல் அறிஞர்கள் இயேசுவை ஏளனம் செய்து பிறரை விடுவித்தான், தன்னை விடுவிக்க முடியவில்லை என இகழ்ந்தனர். இவர்கள் வேதத்தை அறிந்தவர்கள். ஆனால் புரட்டிப் பேசுபவர்கள். நல்ல காரியம் என்று அறிந்திருந்தும், தெரியாதது போல உருட்டலும், புரட்டலும் பேசி மற்றவர்களைக் குழப்பி விடுபவர்கள் இவர்கள். இவர்களைப் போன்ற எண்ணம் கொண்ட நாம் எப்போது மாறப் போகிறோம்- சிவவைப் பாதை தியானம் தான் இயேசுவின் பாடுகளை சிந்தித்து மீட்பு பெற முடியும் என்பதை உணர்வோமா-

**6. சிலுவையைச் சுற்றி:**

மாற்கு 15:35-36 சூழ நின்றிருந்தவர்கள் பொறுங்கள் எலியா இவனைக்க கீழே இறக்குவாரா பார்ப்போம் ! என்றார்கள். இயேசுவைப் புரிந்து கொள்ளாத கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள். பொழுது போகாமல் திண்ணைப் பேச்சு, வெட்டிப் பேச்சு பேசி தவறாக புரிந்து கொள்ளும் கூட்டத்தில் இருக்கின்ற நாம், கேலி கிண்டல், பரிகாசம் போன்ற கெட்ட குணங்களை விட்டு இறைவனை நோக்கி திரும்புவது எப்போது-

**7. சிலுவை அருகில்:**

யோவான் 19:25 சிவவையின் அருகில் நின்று கொண்டிருந்த இயேசுவின் தாய் மரியாள், தாயின் சகோதரியும், குளோப்பாவின் மனைவியுமான மரியா, மகதலா மரியாள், அருளப்பர் அனைவரும் நின்று இயேசுவின் சொல்லுக்கு கீழ்படிந்தனர். நாம் அடுத்தவர் துன்பத்தில் பங்கு கொண்டால் நம் துன்பம் பாதியாகிவிடும். அன்று சிலுவையைச் சுற்றியிருந்த அந்த ஏழு வகையான கூட்டத்தில் நாம் எந்த கூட்டத்தில் இருக்க வேண்டும் என்பதை தீர்மானிப்போம். அன்னை மரியாளும், அவரைச் சுற்றியிருந்த கூட்டமும் இயேசுவின் வார்த்தைக்கு கீழ்படிந்தார்கள்; தியானித்தார்கள். நாமும் திருச்சிலுவையின் மகிமையை உணர்ந்து சிலுவைப் பாதை தியஸனத்தில் பங்கு கொண்டு மீட்பு பெறுவோம். திருச்சிலுவை நம் வாழ்வில் நம்மை எல்லா நிலைகளிலும் உயர்த்தி நம் குடும்பங்களை ஆசீர்வதிக்க நம் அன்புத்தாய் அன்னை திருக்கல்யாணத்தாய் வழியாக இறைவனை மன்றாடுவோம்.

– Y.V.ராஜ், சென்னை - 106.



அருள்தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1. நல்ல வேலை கிடைத்ததற்கு நன்றி : **குருஸ் மார்ல்** (களக்காடு)
2. நற்சுகம் கிடைத்ததற்கு நன்றி: **ஜோசப் இஸ்ரவேல் சகாயம்** (பொற்பை)
3. திருமண வரத்திற்கு நன்றி: **பிரியதர்ஷினி** (இலங்கநாதபுரம்)
4.கு டும்ப சமாதானம் கிடைத்தமைக்கு நன்றி: **வினோத்** (ஆத்தூர்)
5. நல்ல இல்லம் அமைந்ததற்கு நன்றி: **செல்வநாதன்** (பொற்பை)
6. ஆன்மிக பாதையில் வழி நடத்திட நல்லதொரு பங்குத் தந்தையை தந்ததற்கு நன்றி: (**பொற்பை இறைமக்கள்**)
7. நல்ல வரன் அமைந்ததற்கு நன்றி: **கிறிஸ்டி ஜெயபிரபா** (கோவில்பட்டி)
8. நற்சுகம் கிடைத்ததற்கு நன்றி: **ஜோகன்னா** (நெல்லை)
9. நல்ல இல்லம் அமைந்ததற்கு நன்றி: **ஸ்டாலின் அமலா** (உடன்குடி)
10. அலகைத் தொல்லை நீங்கியதற்கு நன்றி: **வினிசன்** (இஞ்சிபூண்டுவிளை)
11. 11 வருடத்திற்குப் பிறகு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்கு நன்றி: **கனகசெல்வி, சகாய சேவியர்** (பொற்பை)
12. நோயிலிருந்து நற்சுகம் கிடைத்ததற்கு நன்றி: **ஜாண்** (சின்னத்துறை).
13. புதிய இல்லம் அமைந்ததற்கு நன்றி: **ஸ்கிரிப்பின்** (பெரியதாழை)
14. நல்ல வேலை கிடைத்ததற்கு நன்றி: **பிரிஜிஸ்டன்** (நாகர்கோவில்)
15. தாடை அறுவை சிகிச்சை வெற்றி பெற்றமைக்கு நன்றி: **ராஜேஷ்** (குதிரைப்பந்திவிளை)
16. தேர்வில் வெற்றி கிடைத்ததற்கு நன்றி: **சுஜித், சுஜித்ரா** (சின்னத்துறை)
17. மிக்கேல் போட் தொழில் வளத்திற்கு நன்றி. **அகிலன்** (வாணிக்குடி)
18. வெளிநாட்டு வேலை கிடைத்ததற்கு நன்றி. **மேரி ஸ்வீட்லின்** (கலியக்காவிளை)
19. குழந்தை பாக்கியம் கிடைத்தமைக்கு நன்றி. **சுதா சேவியர்** (K.T.C.நகர்)
20. வழக்கில் வெற்றி கிடைத்தமைக்கு நன்றி. **டைட்டஸ்** (பொழியூர்)
21. திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி. **பொனிபாஸ், மல்லிகா** (கடகுளம்)
22. பில்லி சூனிய கட்டுக்கள் தீர்ந்தமைக்கு நன்றி. **இராஜம்மாள்** ( கீழக்காட்டுவிளை)
23. வெளிநாட்டு விசா கிடைத்தமைக்கு நன்றி. **ஜோஸ்** (பளிச்சினவிளை)
24. கேட்டவரம் கிடைத்ததற்கு நன்றி. **விஜயராணி** (கேரளா)
25. தீராத வயிற்றுவலி தீர்ந்தமைக்கு நன்றி. **அமிர்தம்** (ஆலன்விளை)
26. கருத்துக்கள் நிறைவேறியதற்கு நன்றி. **ஜோசப்** (பாளையங்கோட்டை)
28. தொழிலில் முன்னேற்றம் தந்து அனுதினமும் காத்து வருகிற கிருபைக்காக நன்றி – **டேவிட்மேரி** (வெள்ளக்கோவில்)
29. நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி. – **கீதா,** (வெள்ளக்கோவில்)
30. எம்.ஏ தமிழ் தேர்வில் வெற்றிபெற்றமைக்கு நன்றி.–**லெஸ்லி வனிதா,** மதுரை

# கவிதைச் சோலை

## புதுக்கணக்கு

வாழ்ந்தோம் என்பது
பழங்கணக்கு – நாம்
வாழ்வோம் என்பது
புதுக்கணக்கு.
இன்றுமுதல்
வீழ்ந்தோம் என்பதை
சரிப்படுத்து – வரும்
வெற்றிகள் உனக்கே
அடுத்தடுத்து.

–D. **சகாய ஸ்மைலின்,** பொற்பை.

## உயிர் சக்தி

அன்பு அமைதிக்கு சக்தி.
ஆக்கம் உழைப்புக்கு சக்தி.
இனிமை சொல்லுக்கு சக்தி.
ஈகை மனிதநேயத்துக்கு சக்தி.
உறுதி மனதுக்கு சக்தி.
ஊட்டம் உடலுக்கு சக்தி.
எண்ணம் செயலுக்கு சக்தி.
ஏடு அறிவுக்கு சக்தி.
ஐயமின்மை ஆற்றலுக்கு சக்தி.
ஒற்றுமை நாட்டுக்கு சக்தி.
ஓங்குபுகழ் தனிமனிதனுக்கு சக்தி.
ஔவை மொழியோ தமிழுக்கு சக்தி.
அஃதே வாழ்வியலின் உயிர் சக்தி.

**–அ. அஜெய் இனிகோ**

## வாழும் வழி

எல்லோரும் புகழ நாம் வாழ வேண்டும் அதற்கு நாம்
எல்லோரும் விட்டுக் கொடுத்து வாழ்ந்திட வேண்டும்
எல்லோரையும் இணைப்பது அன்பு ஒன்றே என்றறிய வேண்டும்.
எல்லா புகழும் எம் அன்னைக்கே – எந்தன்
எழுத்தும், வாழ்வும், அன்னைக்கு, நம் ஆண்டவர் இயேசுவுக்கே!
பணத்திற்கு பல்லிளிக்கும் கூட்டத்தை விட்டுவிட்டு
பாசத்திற்கு பணிசெய்ய நாம் முனைந்திட வேண்டும்.
பழுதின்றி வாழ்ந்திடணும், பழியின்றி வாழ்ந்திடணும், ஆக
எழுகின்ற ஆசை அடக்கி நாம் பகையின்றி வாழணும்
தொழும்போது நமை மறக்கணும் தொண்டு செய்து வாழணும்
விழி மூடி வணங்கி உமை எம் உள்ளத்து ஒளியாக்கிடணும்
விரோதமின்றி பண்புடன் பழகி நம் அனைவரையும் சகோதரராக்கிடணும்
துயரத்தின் நடுவிலும் துளிர்கின்றது துணிவு
துயரமே நிறைந்து எமை துரத்தினாலும்
துயரத்தை துடைத்திட துணை நீயே தாயே!
துயரமே தெய்வமாகி எமைக் காக்கும் கல்யாணத் தாயே!

– L. **வினி லியோ** கோவை

## மாலை மாண்புறு மாலை

மாலை மணி மாலை
மரியாளின் மாண்புறு மாலை
ஆறு பத்துக்கு ஒன்று குறையாய்
அமைந்த அழகு மாலை

நால்வகை மறை உண்மைகளை
நானிலம் போற்றும் வண்ணம்
நாளும் ஜெபித்திட அமைந்த
நயம் நிறை மாலை

துன்புறுவோர் துயர் துடைக்கும்
தூய மணி மாலை
கவலைப்படுவோர் களிப்புடன் வாழ
கன்னிமரி ஜெபிக்கச் சொன்ன மாலை

பாவிகள் பக்தியுடன் ஜெபித்தால்
பாவத்திற்குப் பரிகாரமளிக்கும் மாலை
பாகாய் உருகும் மாதுடரை
பரமனடி சேர்க்கும் மாலை

சஞ்சலப்படுவோர் சங்கடம் தீர்த்து
சமாதானம் அளிக்கும் மாலை
சாத்தானை முறியடித்து ஜெயமளிக்கும்
சத்தான முத்து மாலை

அணுவிலும் ஆற்றல் வாய்ந்த
அற்புதமாம் அழகுநிறை மாலை
அலகையை வென்றிட ஆர்வமாய்
அனுதினமும் ஜெபிப்போம் ஜெபமாலை

– நல்லாசிரியை G. **ரெஜினாள் மேரி,**
பொற்பை.



## சிந்தனைத்துளிகள்

உயிர் சுவாசத்தால் நிலைக்கும்
உறவு பாசத்தால் நிலைக்கும்
இன்பத்தில் மகிழ்வது இயல்பு
துன்பத்தில் சிரிப்பது அறிவு
சீரான கப்பல்
சிறப்பான கடல் பயணம்
நல்நினைப்பு நலமான வாழ்வு
நல்லவன் புகழ் பெற்று சிறப்பான்
கெட்டவன் சிறைபட்டு இறப்பான்

-D. **அந்தோணி ஜெர்லின்**
பொற்பை

## அன்பு

நாட்டின் மீது அன்பு செலுத்து
கட்டபொம்மன் ஆகலாம்
பள்ளி மீது அன்பு செலுத்து
காமராசர் ஆகலாம்
அனாதை இல்லம் மீது
அன்பு செலுத்து
அன்னை தெரசா ஆகலாம்
அனைத்து உயர்கள் மீது
அன்பு செலுத்து
உயரந்தவர்கள் ஆகலாம்

– **டே. நிஜிதா**
வெள்ளக் கோவில்

## மகாத்மா காந்தி

மாந்தருள் தெய்வமாம் காந்தி
சாந்தமூர்த்தி நாயகராம் காந்தி
போர்பந்தர் நகரில் பிறந்தார் காந்தி
பாரதத்தின் உரிமை கேட்டார் காந்தி
கஸ்தூரி கைபிடித்தார் காந்தி
சத்தியத்தை போற்றி வந்தார் காந்தி
அகிம்சை வழி புகழ்பெற்றார் காந்தி
அகில உலக ஜோதியானார் காந்தி

- P. **ஜோஸ்பின்**
பொற்பை

# வைராக்கியம் (அல்லது) பிரதிக்கினை

என் சிந்தனைக்கு எட்டியதை நான் உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். நான் வியாபார வியமாக நம் கிராமத்திற்கு சென்றேன். ஒரு வீட்டில் இந்து சகோதரர் ஒருவர் என்னிடம் என் விரலில் போட்டிருந்த மோதிரத்தை பார்த்து இது எத்தனை கிராம் என்று கேட்டார் நான் 16 கிராம் என்று சொன்னேன், உடனே அவர் சொல்வார் நானும் இதை போல் ஒன்று செய்ய வேண்டும் என்று ஆசைபடுகிறேன் செய்ய முடியவில்லை என்று சொன்னார். நான் உடனே ஏன் முடியாது முடியும் என்று சொன்னேன், ஏனென்றால் அவருக்கு குடிபழக்கமுண்டு. நீ ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பாதிக்கிறாய் என்று கேட்டேன். 500ரூபாயிலிருந்து 600 ரூபாய் வரைக்கு சம்பாதிக்கிறேன் என்றார்.( ஏனென்றால் அவர் மூட்டைதூக்கும் தொழிலாளி) நான் உடனே சொல்வேன் எங்கள் பைபிள் சொல்கிறது குடிகாரரான தொழிலாளர்கள் செல்வந்தராக முடியாது, சிறியதென புறக்கணித்தால் சிறுக சிறுக வீழ்ச்சி அடைவாய் என்று சொல்லியிருக்கிறது என்றேன். (ரோக்கான ஆகமம் 19:1 வசனம்) ஆனால் பணக்காரை பற்றி சொல்லவில்லை தொழிலாளியை பற்றி தான் சொல்லி இருக்கிறது என்றேன். உடனே அவன் அண்ணாச்சி இதே மாதிரி மோதிரம் நான் 6 மாதத்திற்குள் பண்ணியே தீருவேன் என்று உறுதியான பிரதிக்கினை எடுத்தான். நான் இனிகுடிக்கமாட்டேன் இது உறுதி என்றான். பிறகு ஏழுமாதம் கழித்து என்னிடம் அண்ணாச்சி நான் உங்களிடம் வாக்கு கொடுத்ததுபோல் மோதிரமும் செய்துவிட்டேன், என்று மோதிரத்தை காட்டினார் இப்போது நான் குடியையும் நிறுத்திவிட்டேன் என்றார். எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது அந்த இந்து சகோதரரை கட்டிதழுவினேன். அன்பு உள்ளம் கொண்டவர்களே, நாமும் இந்த இறைவசனத்தை பின்பற்றினால், அந்த சகோதரரைபோல் குடிக்காமல் இருந்தால் எவ்வளவோ பொருட்களையும் செல்வங்களையும் சேர்க்கலாம். நம் மனைவி மக்களோடு மகிழ்ச்சியாகவும் வாழலாம். இன்றே நாம் அந்த பிரதிக்கினையை கையாள்வோம் இறைவனுக்கு நன்றி

– **இருதயராஜ்,** ரூபிஸ்டோர் பொற்பை

## அன்னை தெரசாவின் அன்பு மொழிகள்....

நம்முடைய உண்மையான தேவைகளை கடவுள் மட்டுமே அறிவார்! அமைதி என்பது புன்னகையிலே ஆரம்பமாகிறது! நம்முடன் வாழ்வோரை புரிந்துகொள்வதற்கு, நம்மைநாமே முதற்கண் புரிந்துகொள்வது அவசியம்! உனக்கு தேவையில்லாததை பிறருக்கு கொடுப்பது தர்மமாகாது! அன்பு ஒன்று தான் மனிதர்களை பிணைக்கும் அற்புத சக்தி ! ஏழைகள் கடவுளின் மறு உருவமாக இருப்பவர்கள். அவர்கள் மீது அன்பு காட்டுங்கள். உங்களது உழைப்பும் அவர்களுக்காக இருக்கட்டும். இவ்வுழைப்பு கடவுளுக்காக செய்யும் உழைப்பு!



– **ரூபன் ஸ்வீட்டன்,** திசையன்விளை

சென்ற மாத தொடர்ச்சி......

# கைமாறு

"ஐயா நீங்கள் பார்க்கும் அந்த பெண்தான் ராணி. நாற்காலியில் அமர்ந்திருக்கும் அந்த பெரியவர்தான் அவனது தந்தை ராஜசேகர். சுமார் 20 வருடங்களுக்கு முன்னால் ராஜசேகர் இந்த சர்க்கஸின் ஒப்பற்ற ரிங் மாஸ்டர். அவரது குரலுக்கு சிங்கங்களும், புலிகளும் பூனைக்குட்டிகள் போல கீழ்படியும். அவரது ஒரே மகள்தான் ராணி. பெயரில் மட்டுமல்ல சாகசங்கள் புரிவதிலும் அவள் ராணிதான். அவள் சிறுமியாக இருந்தபோது அவளுக்கு ராக்கெட் ராணி என்ற புனைப்பெயர் கூட உண்டு. அந்த அளவிற்கு அவளது சாகசங்கள் இருக்கும். உயரத்திலே தலைகீழாக கயிற்றில் ஆடி இங்கும் அங்கும் பறப்பாள். 50 அடி உயரத்தில் ஒற்றை கயிற்றின்மேல் ஒற்றைச் சக்கரம் கொண்ட சைக்கிளை ஓட்டிவருவாள்.

அப்போது ஒரு நாள் சர்க்கஸின் இரவு நிகழ்ச்சிகள் அருமையாக நடந்து கொண்டிருந்தன. ஒளி வெள்ளத்தில் சாகசங்கள் நடந்துகொண்டிருந்தன. ரிங் மாஸ்டர் ராஜசேகர் சிங்கங்களையும் புலிகளையும் மேசைகள்மேல் ஏறி நிற்க வைத்துக்கொண்டிருந்தார். மேலே, உயரத்தில் ராணி தனது ஒற்றை சக்கர சைக்கிளை கயிற்றின்மேல் ஓட்டிக்கொண்டிருந்தாள். பார்வையாளர்கள் யாவரும் வியப்புடன் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று ராணி சைக்கிள் ஓட்டி வந்த கயிறு அறுந்துவிட்டது.

ராணி நிலை குலைந்து சைக்கிளோடு கீழே விழுந்தாள். பயத்தில்தன் பலம் கொண்ட மட்டும் "அப்பா......!" என்று அலறினாள். கீழே நின்றிருந்த ராஜசேகர் தன் மகள் உயரத்திலிருந்து கீழே விழுவதைப் பார்த்தார். " ராணீ.... " என்று அலறியபடி அவளைப் பிடிக்க ஓடி வந்தார். ராணி தன் சைக்கிளோடு ராஜசேகர்மேல் விழுந்தாள். எந்தவித காயமுமின்றி பிழைத்தாள். ஆனால் ராஜசேகரின் கழுத்தில் சைக்கிள் விழுந்ததால் அவரது கழுத்தெலும்பு உடைந்து, கழுத்து வளைந்து விட்டது. அவர் பேசும் திறனையும் இழந்தார். நீண்ட நாள் படுக்கையில் இருந்து இப்போதுதான் நாற்காலியில் அமரும் அளவிற்கு முன்னேறியிருக்கிறார். என்று பெருமூச்சுடன் கூறினார். சர்க்கஸ் உரிமையாளர் திரு. தங்கபாண்டி.

இதைக்கேட்டுக்கொண்டிருந்த எனது இதயத்தை யாரோ பிசைவது போல்இருந்தது. உற்சாகமாக வாழ்ந்து வந்த குடும்பம் ஒரு நொடியில் தன் நிலை குலைந்து போய் விட்டதே என்று எண்ணினேன். பின்னர் தன் தந்தையின் தியாகத்திற்கு கைமாறாக ராணி திருமணம் செய்யாமல் தன் வாழ்நாள் முழுவதும் தன் தந்தைக்கு துணையாகவும், சிறுமிகள் பாதுகாப்பாக சாகசம் புரிவதற்கு பயிற்சியாளராகவும் தன் வாழ்வை கழிக்க உறுதி கொண்டு அந்த சர்க்கஸ் கூடாரத்தில் வசித்து வருகிறாள் என்பதையும் அறிந்து கொண்டேன்.

தன் தந்தையின்தியாகத்திற்கு ராணியின் கைமாறு இதுவெனில் நம் பரம தந்தை நமக்காக சிலுவையில் மரித்த தியாகத்திற்கு நாம் என்ன கைமாறு செய்யப்போகிறோம் என்ற கேள்வியுடன் அந்த சர்க்கஸ் கூடாரத்திலிருந்து வெளியேறினேன்.

**– த. பீட்டர் அந்தோணி ராஜ்**



# எனது கிராமம்

– ம. ஜேசுதாசன்
(முன்னாள் தலைவர்,
தமிழ:நாடு மெர்க்கண்டைல் வங்கி)

ஐரோப்பிய மினரிகளான பிப் கால்டுவெல், ஜார்ஜ் பெட்டிட் மற்றும் பின்னாளில் தமிழ்நாட்டின் நாடார்கள் வரலாறு என்ற புத்தகத்தை எழுதிய அமெரிக்க பேராசிரியர் ராபர்ட் ஹார்டுக்ரேவ் இவர்கள் எல்லோரும் தங்களுடைய புத்தகங்களில் ஒரு கருத்தை மிக தெளிவாகவும் உறுதியாகவும் பதிவு செய்துள்ளார்கள். அவர்கள் கூறுகிறார்கள், 19-ம் நூற்றாண்டின் நடுவில் நாடார்கள் வாழ்ந்த திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் மற்றும் நான்குநேரி பகுதிகளில் பல கிராமங்கள் முழுவதும் கிறிஸ்துவ மதத்திற்கு மாறின. அவ்விதம் மாறினதும் அந்த கிராமத்தின் நிர்வாகத்தை கவனிக்க மினரிகளின் உதவியோடு ஒரு குழுவை நிறுவினார்கள். இந்த ஏற்பாட்டின் விளைவாக அந்த கிராமங்களில் ஒற்றுமையும், சமாதானமும் நிலவியது. அந்த மக்களின் நிலையும் சமுதாயத்தில் மேம்பட்டது. இந்த ஒற்றுமையும் மேம்பாடும் பிற நாடார் கிராமங்களில் இருந்ததில்லை என்று. இந்த நிர்வாக ஏற்பாடு பொத்தக்காலன்விளையிலும் நிறுவப்பட்டது. ஒரு வேறுபாடு, இங்கே நிர்வாகக் குழுவுக்கு பதிலாக முக்கந்தர் என்ற ஒருவரை தலைவராக தேர்ந்தெடுத்து அவருடைய முழு மேற்பார்வையின் கீழ் ஊர் மற்றும் கோயில் நிர்வாகம் கொண்டு வரப்பட்டது.

ஊர் முக்கந்தராக பொறுப்பேற்பவர் ஊர் மக்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருவராக இருந்தார். அதோடு நிலபுலன்களோடு ஓரளவு வசதி படைத்தவராகவும் இருந்தார். 19-ம் நூற்றாண்டின் இறுதி காலத்தில் பாக்கியம் முக்கந்தர் என்பவர் பல ஆண்டுகள் தலைவராக இருந்துள்ளார். இவருடைய கல்லறை இன்றும் அவருடைய வாரிசுகளால் பேணப்பட்டு நினைவுச் சின்னமாக திகழ்கிறது. அவருக்குப் பின்னர் ஒன்றிரண்டு பேர் முக்கந்தராக பொறுப்பேற்றுள்ளார்கள். அவர்களைப் பற்றி சொல்லும்படியாக எதுவும் இல்லை. 1930-35 வாக்கில் பொறுப்பேற்ற பரஞ்சோதி முக்கந்தர்ன ஒரு பெரிய நிர்வாக திறமைசாலிய சாதனையாளர் எனலாம்.

பரஞ்ஜோதி முக்கந்தர் பற்றி எழுதும்போது எனக்கு நினைவில் வருவது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்தான். அதிகம் படிக்காத காமராஜர் தன்னுடைய இயற்கையான அறிவாலும், திறமையாலும் ஒரு மாநிலத்தின் முதல் மந்திரியாகவும், இந்நாட்டின் ஒரு பெரிய தேசியக் கட்சியின் தலைவராகவும் எவ்வாறு வெற்றிக்கொடி நாட்டினாரோ அதேபோல பள்ளிக்குச் சென்று படிப்பை அறியாத பரஞ்ஜோதி முக்கந்தர் தன்னுடைய நாட்டு அறிவு மற்றும் விவேகத்தின் மூலம் பொத்தக்காலன்விளை கிராமத்தையும், அதன் மக்களையும் வெற்றிகரமாக பல ஆண்டுகள் நிர்வாகித்து வழிநடத்தினார்.

பரஞ்சோதி முக்கந்தர் எந்த ஆண்டு பொறுப்பேற்றார் என்ற விபரம் தெரியவில்லை. ஆனால் பொத்தக்காலன்விளை தனிப்பங்காக அறிவிக்கப்பட்டு தந்தை பங்காரு அடிகளார் பங்குக்குருவாக வருவதற்கு முன்பே, அதாவது 1933 வாக்கில், அவர் முக்கந்தராக பொறுப்பேற்றிருக்க வேண்டும். அவருடைய பணிகளில் முக்கியமானது கோயில் சொத்துக்களை பராமரிப்பது, மற்றும் பங்கு நிர்வாகத்தில் பங்குக் குருவானவருக்கு உதவுவது. அந்தக் காலத்தில் கோயிலுக்கு சொந்தமாக கட்டிடங்களும் புஞ்சை நிலங்களும் இருந்தன. அந்த புஞ்சை நிலங்களில் உடைமரங்கள், பனைமரங்கள், புளிய மரங்கள் நிறைய இருந்தன. இவை எங்கெங்கே உள்ளன. எத்தனை மரங்கள் உள்ளன என்ற விபரங்கள் பரஞ்சோதி முக்கந்தருக்கு அத்துபடி, அவற்றை ஒவ்வொரு ஆண்டும் குத்தகைக்கு கொடுப்பது, குத்தகை தொகையை முறையாக வசூலிப்பது எல்லாம் முக்கந்தர் தான். குத்தகை கொடுப்பதற்கு ஒரு ஒழுங்கு முறையை பின்பற்றினார். அதாவது ஒரு ஞாயிற்றுக்கிழமை முன் அறிவிப்பு கொடுத்து கோயில் மேடையில் ஊர் மக்கள் கூட்டம் நடத்தி அந்தக் கூட்டத்தில் ஏலமுறையில் குத்தகை கொடுப்பார். இந்த முறையால் எந்தவிதமான குறைபாடுகளும் கூறுவதற்கு வாய்ப்பு இருந்ததில்லை.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் நடைபெறும் ஊர்த்திருவிழாவை தடையின்றி நல்லமுறையில் நடத்துவதில் பங்குக் குருவானவருக்கு அடுத்தபடியான பொறுப்பு முக்கந்தருடையது. திருவிழா செலவை ஈடுகட்ட திருவிழா வரி நிர்ணயித்து அதை வசூலிப்பது, கொடியேற்ற நாளிலிருந்து கொடியிறக்க நாள் வரை ஏலம் விடுவது, சப்பரங்கள் தூக்குவதற்கு ஆள் சேர்த்தல், தேரை ஒழுங்குடன் இழுத்துச் செல்ல தேர்ச்சக்கரங்களுக்கு சக்கை இடுதல், உப்பு போன்ற காணிக்கை பொருட்களை உரிய இடங்களுக்கு எடுத்துச் செல்லுதல், தேர் சப்பரங்களுக்கு தீவட்டி ஒளி கொடுத்தல், காணிக்கை பணத்தை எண்ணி கணக்கு கொடுத்தல் என நுணுக்கமான பல பணிகள் இருந்தன. அந்த காலத்தில் மாதாவின் தேர் சப்பரம் தவிர்த்து ஒவ்வொரு புனிதருக்கும் ஒரு சப்பரம் என சிறியதும், பெரியதுமாக 10 சப்பரங்கள் இருந்தன. அவற்றை அலங்காரம் செய்வதும், தோள்மேல் சுமந்து சென்று பவனியாக தேர் வீதிகளில் கொண்டு வருவதும் ஒரு பெரிய பணி. ஆனால் மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு பணிக்கும் ஒன்றிரண்டு பேரை ஏற்பாடு செய்திருப்பார் முக்கந்தர். அதனால் ஒவ்வொரு பணியும் கன கச்சிதமாக நடைபெறும். அதோடு புதிய ஆலய பணி தொய்வின்றி தொடர்ந்து நடைபெற்று முடிவு பெறுவதில் பெரும் பங்கு ஆற்றினார். 1957-வாக்கில் ஆலயப் பணிக்கு நன்கொடை பிரிப்பதற்காக தந்தை சிலுவை அந்தோணி அடிகளார் இலங்கை சென்றபோது அவருடன் சென்று அங்கு இருந்த நம் மக்களை அறிமுகப்படுத்தி பெரும் நன்கொடை வழங்க தூண்டியதும் முக்கந்தர்தான்.

பரஞ்சோதி முக்கந்தரின் நிர்வாகத் திறமையின் சிகரமாக விளங்கியது அவர் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு கூறும் பாங்குதான் என்றால் மிகையாகாது. ஊரில் நடக்கும் அடிதடி சண்டைகள், பெண்களை பாதிக்கும் சம்பவங்கள், திருட்டுகள், சொத்து தகராறுகள், கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகள், குடும்ப சண்டைகள் இவற்றால் ஏற்படும் பிரச்சனைகளை முக்கந்தர் தலைமையில் ஊர் கூடி விசாரித்து தீர்ப்பு கூறுவது, தவறு செய்தவருக்கு தண்டனை கொடுப்பது என்ற பாரம்பரியம் அந்தக் காலத்தில் நடைமுறையில் இருந்தது. பாதிக்கப்பட்ட யாரும் 4 அணா (25 காசு) பீஸ் கட்டி, தனக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்கலாம். அதைத் தொடர்ந்து முக்கந்தர் ஒரு ஞாயிற்று கிழமையன்று ஊரக்கூட்டத்தை கூட்டுவார். கூட்டம்



பெரும்பாலும் ஊர் நடுவிலுள்ள சாலை ஓரம் மரத்தடியில் அல்லது கட்டிடத்தின் முன்வராண்டாவில் நடைபெறும். சில சமயங்களில் குருவானவரின் பங்களாவிலும் நடைபெறும். பரஞ்சோதி முக்கந்தரின் சம வயதுடைய செட்டியார் என்று அழைக்கப்பட்ட அந்தோணிமுத்து நாடார், சிந்தாமணியார் என்று அழைக்கப்பட்ட ராஜகன்னிமரியான் நாடார் இவர்கள் பெரும்பாலும் பிரசன்னமாகிவிடுவார்கள். ஞானதிக்கம் உபதேசியார் சில சமயங்களில் பங்கெடுப்பார். பாக்கியம் நாடார் என்பவர்தான் முக்கந்தரின் ஏல்களை நிறைவேற்றிக் கொடுக்கும் உதவியாளர். வழக்கு விசாரணை மற்றும் தீர்ப்பு என்பது ஏறக்குறைய ஒரு நீதிமன்றத்தில் நடப்பது போலவே இருக்கும் பெரும்பாலான வழக்குகள் ஒரு கூட்டத்திலேயே முடிந்துவிடும். ஆனால் சில வழக்குகள் வாரக்கணக்கில், மாதக் கணக்கிலும் இழுத்தடிக்கும். இரு பக்கமும் சூடு தணியட்டும் என்று வேண்டுமென்றே தீர்ப்பை தள்ளிவைப்பார். சில வேளை சம்பந்தப்பட்ட இருபக்கமும் சம அளவு ஆதரவு இருந்தாலும் தள்ளிப்போகும். தீர்ப்பு பொதுவாக குற்றம் செய்ததாக நிரூபிக்கப்பட்டவர் பொது மன்னிப்பு கேட்க வேண்டும். அல்லது ஒரு தொகையை கோயிலுக்கு அபராதமாக செலுத்த வேண்டும். மிகப் பெரிய குற்றமாக கருதப்பட்டால் தவறு செய்தவரை மொட்டை அடித்து கரும்புள்ளி குத்தி ஊரைச் சுற்றி வரச் செய்ய வேண்டும் என்றும் தீர்ப்பு கூறுவதும் உண்டு. ஆனால் இந்த தண்டனை மிக அரிது. எந்த தீர்ப்பானாலும் அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கும், கட்டுப்பாடும் இருந்தது. இது பரஞ்சோதி முக்கந்தரின் நேர்மைக்கும், பாராபட்டசமற்ற குணத்திற்கும் சான்று.

இந்த முறையால் கிராமத்தில் குற்றச் செயல்கள் குறைவாக இருந்தன. தவறு செய்பவர்களிடமும் தவறு செய்ய தூண்டுபவர்களிடமும் ஒருவித பயம் இருந்தது. கிராமத்தில் கட்டுப்பாடும் நிலவியது. எல்லாவற்றிற்கும் மேலாக சிறு குற்றச் செயல்களுக்கெல்லாம் காவல் நிலையத்திற்கு செல்வதும் நீதிமன்றப் படியேறுவதும் அதனால் ஏற்படும் பணச் செலவும், காலவிரயமும் தவிர்க்கப்பட்டது. பரஞ்சோதி முக்கந்தரின் நீண்ட நெடிய வெற்றிப் பயணம் 1981-ஆம் ஆண்டு ஒரு முடிவுக்கு வந்தது. அந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ம் தேதி ஒரு திங்கட்கிழமையன்று தன் 97வது வயதில் அவர் காலமானார். எந்த குருவானவரோடு தோளோடு தோள் நின்று 12 ஆண்டுகள் தொடர்ந்து கோயிலின் நிர்வாகத்தை கவனித்தாரோ அதே தந்தை சிலுவை அந்தோனி அடிகளாரின் தலைமையில் பல குருக்களும், கன்னியர்களும், வெளியூர் மக்களும் கலந்து கொண்ட முக்கந்தரின் இறுதி யாத்திரை அவரின் செல்வாக்கை பறைசாற்றுவதாக இருந்தது. அவருடைய ஆயுளுக்குப் பின்னால் யாரும் முக்கந்தர் பொறுப்பு ஏற்கவில்லை. அந்த பழைய நிர்வாக முறையும் அவரோடு மறைந்தது. ஆனால் காலம் மாறினாலும் ஆட்கள் மாறினாலும் அன்று பரஞ்சோதி முக்கந்தர் போன்ற பெரியோர்களால் போடப்பட்ட அடித்தளத்தினால் இன்றும் கிராமத்தில் ஒற்றுமை, கட்டுப்பாடு, தலைமைக்கு பணிதல் போன்ற நற்குணங்கள் நிலைத்து நிற்கின்றன.

– இன்னும் வரும்.....

**ஹெல்த் டிப்ஸ் :**

# உணவே மருந்து

இன்றைய உணவு முறைகளில் நாம் பல புதுமைகளை புகுத்துகிறோம் என்று சுவையைச் சேர்க்கிறோம். ஆனால் சத்துக்களை இழக்கிறோம். இதனால் நம் உடம்பில் சேரக்கூடிய அனைத்து சத்துக்களும் அழித்து தேவையான ஊட்டமில்லாமல் தவிற்த்துக் கொண்டிருக்கிறோம். உதாரணமாக நம் வீட்டில் 30 வயதை தாண்டிய அனைவருக்கும் கால்வலி, முட்டி வலி, கழுத்துவலி போன்ற பிரச்சனைகள் காரணமாக காணப்படுகின்றன வலிப்பிரச்சனைகள் இல்லாத வீடே இல்லை என்று கூட கூறலாம். சற்று சிந்தித்து பாருங்கள் நம் தாத்தா, பாட்டி காலத்தில் இத்தனை வசதிகள் இல்லவே இல்லை ஆனால் அவர்கள் அம்மியில் அரைத்தும் ஆற்றில் துணி துவைத்தும், கிணற்றில் நீர் இறைத்தும், திருகலில் திருகியும் (மருக்கு திருகல் என்றால் என்னவென்றே தெரியாது இப்போது) ஆட்டுகல்லில் மாவரைத்தும் ஆரோக்கியமாகவும் வேலைகளை செய்வதில் எந்த தயக்கமும் முக்கியமாக எந்த வலியும் இல்லாமல் வாழ்ந்து வந்துள்ளனர் அது ஏன்– எப்படி– என்று யோசித்துப்பாருங்கள். ஏனெனில் அவர்கள் உணவே மருந்தாக இருந்தது இன்று நாம் உண்ணும் காய்கறிகள் அரிசி பழங்கள் அனைத்தும் ரசாயன உரங்களினால் விளைவிக்கப்படுகின்றன. அதனால் அதன் உண்மையான குணங்கள் அழிக்கப்பட்டு முழுவதும் மாற்றுத்தன்மையடைகிறது. இன்று நாம் குடிக்கும் தண்ணீரில் இருந்து குழந்தைக்கு கொடுக்கும் பால் வரை ரசாயனம் கலந்துள்ளது. முற்காலத்தில் அவ்வாறாக இல்லை இயற்கையான உரங்களை பயன்படுத்தியே விவசாயம் நடைபெற்றது. எனவே அதன் முழு குணநலன்களும் அறியாமல் இருந்து மேலும் கருப்பட்டி, தேன் போன்ற இயற்கை பொருட்களையே அதிகம் பயன்படுத்தினால் உடல் உழைப்பும் அதிகம் ஆனால் நம் காலத்தில் உடல் உழைப்பு குறைந்து மன உளைச்சல் (stress) அதிகம் காணப்படுகிறது இதனால் பல்வேறு வியாதிகளை நாமே உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். இந்த முறையிலே நம் உணவு முறையும், பழக்கவழக்கங்களும் சென்றால் நமது அடுத்தத் தலைமுறையினர் இதைவிட முன்னரே பாதிக்கப்படுவர் இதை தவிர்க்க நாம் இப்போதே சில முறைகளை மாற்ற வேண்டிய – மாற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். முதலில் **குழந்தைகளுக்கு** 1. நம் குழந்தைகளை டி வி முன்னர் பல மணிநேரம் இருப்பதை குறையுங்கள், 2. எண்ணெயில் பொரித்த பதார்த்தங்களை தவிர்த்து வேர்கடலை பேரிச்சம் பழம், எள்ளுருண்டை, பழங்கள், போன்றவற்றை சாப்பிட பழக்குங்கள். 3. பூஸ்ட், ஹார்லிக்ஸ் போன்ற பானங்களை குழந்தைகளுக்கு கொடுப்பதை தவிர்த்து ராகி, கோதுமை போன்ற நவதானியங்கள் கலந்த மாவை குடிக்க குழந்தைகளை பழக்குங்கள் 4. டி வி விளம்பரங்களில் காட்டப்படும் வியங்களை நம்பி முதலில் ஏமாறுவதை நிறுத்துங்கள்.

**பெரியவர்களுக்கு :** 1. அருகாமையில் ஒரு இடத்திற்கு செல்வதென்றாலும் நடந்தே செல்ல முயலுங்கள். 2. சீனிக்கு பதில் கருப்பட்டி, வெல்லம், தேன் போன்றவற்றை பயன்படுத்துங்கள். 3. வாரத்திற்கு இருமுறை கீரையும் தினம் ஒரு காய்கறியும் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். 4. டாக்டரின் ஆலோசனையில்லாமல் மெடிக்கலில் மருந்துகளை வாங்கி உண்ணாதீர்கள். 5. பிராய்லர் கோழிகளை தவிர்த்து நாட்டுக்கோழி, மீன், ஆட்டிறைச்சியை சேர்த்துக்கொள்ளுங்கள் பிராய்லர் கோழிகள் மருந்துகளை உடம்பில் ஏற்றி அவை கறிக்கோழிகளாக உருவாக்கப்படுகின்றன. இந்த மருந்தினால் பெண் குழந்தைகள் சிறுவயதிலேயே பூப்பெய்வதற்கும், ஹார்மோன் பிரச்சனைகள் வருவதற்கும் வழிவகுக்கின்றன. பெரியவர் முட்டிவலி போன்றவை வர வழிவகுக்கின்றது.

எனவே இயற்கையில் கிடைக்கும் பொருட்களை இயற்கை உரங்களாளே விளை வித்து இயற்கையையும் காத்து, நம் உடலை காத்து, நம் எதிர்கால சந்நதியினரையும் காத்து முன் மாதிரியாக திகழ்வோம்.



# ஞானம் நிறைந்த பாத்திரமே

அருட்திரு. ஜோசப் ஸ்டார்லின்

ஆண்டவரிடம் அச்சம் கொள்ளுதலே ஞானத்தின் தொடக்கம் அது இறைப்பற்றுள்ளோருக்குத் தாய் வயிற்றிலிருக்கும் பொழுதே வழங்கப் பெருகிறது (சீராக் 1:14).

அன்னை மரியா பாவம் செய்து கடவுளின் கருனை மனதைப் புண்ணாக்கவில்லை. இறைப்பற்று இறையச்சம் ஆகியவை கொண்டு வாழ்ந்த அன்னை மரியா ஞானம் நிறைந்த பாத்திரமானார்.கடவுள் ஒருவரே ஞானம் நிறைந்தவர். ஆனால் அந்த ஞானம் மரியா வடிவில் தோன்றி அவர் வழியாக இயேசு உருவில் வெளியானது. ஞானம் நிறைந்த கிறிஸ்து தூய ஆவியை நம்மில் பொழிந்து ஞானத்தின் கொடைகளை நமக்குப் பரிசாகத் தருகிறார்.

மரியா ! ஞானம் நிறைந்த பேரொளி

எனக்கு அறிவு புகட்டுவோர் அனைவரினும் நான் விவேகமுள்ளவனாய் இருக்கிறேன் ஏனெனில் உம் ஒழுங்கு முறைகளையே நான் சிந்திக்கிறேன் (தி.பா.119:99).

அன்னை மரியா ஞானம் நிறைந்த பேரொளி என்பதால் அவரின் ஞான ஒளி பிரசன்னம் எல்லா இடங்களிலும் இருக்கும்.நன்மை கடவுளை மேன்மைப்படுத்திப் பெருமைப்படுத்தும் மாந்தர் மீதும் பக்தர் மீதும் அன்னை மரியாவின் ஞானம்நிறை பார்வை என்றும் இடைவிடாது இருக்கும்.தீமை செய்து கடவுளின் மனதைக் காயப்படுத்தி மனிதரின் அன்பையும் அரவணைப்பையும் புறக்கணிக்கும் மனிதர்மீதும் அவரது பார்வை தங்கும்.அவர் எதையும் ஒளி நிறை பார்வையாலே தன்னை நம்பி வரும் பக்தர்களின் குறை தீர்த்து எங்கும் எதையும் உருமாற்றம் செய்து கடவுளின் வல்லமையை வெளிப்படுத்துவார். அவரை அணுகும் அனைவரும் ஆண்டவரின் நண்பராகவும் அன்பராகவும் மாற வாழ முடியும்.

ஞானம் ! என்றுமுள்ள ஒளியின் சுடர் கடவுளது செயல் திறனின் கறைபடியாக் கண்ணாடி அவருடைய நன்மையின் செயல்(சா.ஞா.7:26)

இவ்வாறாக ஞானத்தின் உன்னதமான உண்மையையும் உயர்வையும் நாம் அறியலாம். அன்னை மரியாவின் ஞானம் தன்னலமற்ற தியாகச் சுடராகவும் குன்றின் மேலிட்ட விளக்காகவும் அணையாத ஜோதியாகவும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. அவரின் ஞானம் இருளில் நடக்கும் மனிதருக்கு ஒளியாகவும் வெறுப்பில் நடக்கும் மாந்தருக்கு அன்பாகவும் செயல்படுகிறது.

**ஞானத்தின் இயல்பும் மேன்மையும்**

ஞானம் !ஆற்றல் கொண்டது.அவ்வாற்றல் அறிவுடையது தூய்மையானது தனித்தன்மை வாய்ந்தது பலவகைப்பட்டது நன்மையானது உயிரோட்டம் உள்ளது தெளிவுமிக்கது மாசுப்படாதது வெளிப்படையானது கேடுறாது நன்மையை விரும்புவது கூர்மையானது (சா.ஞா.7:22).

(தொடரும்....)

உலகப்புகழ் பெற்றவர்கள் :

# ஜோசப் பில்சுட்ஸ்கி



போலந்து நாட்டின் வரலாற்றில் சிறப்பான இடம் பெற்ற வீரர் பில்சுட்ஸ்கி. நாட்டுக்காகப் போராடி தம் உயிரையும் தரக்கூடிய பல்லாயிரம் பேரடங்கிய ஒரு சொந்தப்படை இவரிடம் இருந்தது. முதல் உலகப் போரின்போது போலந்து விடுதலைக்காக போராடினார். அதற்காக ஜெர்மானியரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர். போர் முடிவில்தான் விடுதலையானார். நேச நாடுகள் போலந்து நாட்டுக்கு தனி நாட்டு உரிமையளித்தன. நாட்டின் அதிபராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த பதினைந்து ஆண்டுகளுக்கு போலந்து அரசியலில் அவரது கையே ஓங்கியிருந்தது. நாட்டு மக்களின் தேசியப் பெருமையை வளர்த்து, படைபலத்தைப் பெருக்கி, படையெடுத்து வந்தவர்களை முறியடித்து, போலந்து வரலாற்றில் பெருமையான இடத்தைப் பெற்றார். இவரது காலம் 1867 – 1935.

புகழ் பெற்ற இந்தியர்கள் :

# வி.வி. கிரி

தொழிலாளர் தலைவராக இருந்து இந்தியத் தொழிற்சங்க இயக்கத்துக்குச் சிறந்த பணியாற்றியுள்ள இவர் 1894ல் பிறந்து, அயர்லாந்திலுள்ள டப்ளினில் சட்டம் படித்தவர். 1921-ல் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து வக்கீல் தொழிலை விட்டார். 1927-ல் அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத் தலைவராக இருந்தார். அ.இ. தொழிற்சங்க காங்கிரஸ் தலைவராக இருமுறை இருந்தவர். சர்வதேச தொழிலாளர் காங்கிரசுக்கு சென்றார். 1937-1939-லும், பின்னர் 1946லும் சென்னை அமைச்சரவையில் இடம் பெற்றார். 1947-50ல் இலங்கையில் இந்திய ஹைகமினராக இருந்தார். 1952-54ல் இந்திய அரசு தொழிலாளர் நலஅமைச்சராக இருந்தார்.




உ.பி., கேரளா, மைசூரில் கவர்னராகவும் பணியாற்றியுள்ளார். இவர் 1967-ல் குடியரசு துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1969-ல் அதிலிருந்து விலகி குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்றார். 1980 ஜூன் மாதம் 24ம் நாள் காலமானார்.

# செப்டம்பர் மாத விவிலிய விடைகள்

1. இஸ்மயேல்
2. ஆபிராம்
3. விருத்த சேதனம்
4. லோத்து
5. சிரிப்பவன்
6. எபயேர்செபா
7. பெத்துவேல்
8. லாபான்
9. நூற்றி எழுபத்தைந்து ஆண்டுகள்
10. ஏமாற்றுபவன்
11. லூசு
12. மாட்சிமை
13. இருபது ஆண்டுகள்
14. கடவுளின் படை
15. தீனா
16. கருவாலிமரம்
17. பென்யமின்
18. நூற்றெண்பது ஆண்டுகள்
19. யோசேப்பு
20. போத்திபார்

# கடந்த மாத கேள்வி-பதில் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| D.ஜோஸ்பின் மேரி தாசன் | கவரப்பேட்டை |
| W. பெமிலா வில்சன் | கவரப்பேட்டை |
| M. அனிதா ஜான்சன் | கவரப்பேட்டை |
| U.பெனிட்டா டோமினிக் | கவரப்பேட்டை |
| S.கீதா சுரேஷ் | கவரப்பேட்டை |
| A. அன்ன புஷ்பம் ராஜன் | கவரப்பேட்டை |
| T. சுகிர்தமணி அன்பரசன் | கவரப்பேட்டை |
| A. ஜோஸ்பின் அபிஷியா | கவரப்பேட்டை |
| A. ஜோசப் அரிஸ்டாட்டில் | கவரப்பேட்டை |
| S. தினேஷ் எல்ஸி | கவரப்பேட்டை |
| U.இமாகுலேட்சியோனா | கவரப்பேட்டை |
| U.ஆண்டனி அருண்ஜோசப் | கவரப்பேட்டை |
| லூர்து மேரி தேவசகாயம் | பிரகாசபுரம் |
| Bசெல்வகுமார் மலர்விழி. | தி.க. குன்றம் |
| A. தெரஸ்லின்ராஜன் | பொற்பை |
| A. ஜான்ஸி சேகர் | பொற்பை |
| S. ஜெயந்தி தங்கம் | பொற்பை |
| G. ரெஜினாள் மேரி | பொற்பை |
| S.மேரி லீலா | பொற்பை |
| A. சகாய லீன் நர்மதா | தோப்புவிளை |
| கபிரியேஸ் மேரி | பொற்பை |
| குயின் ரோஸ் பாக்கியம் | பொற்பை |
| மிக்கேல்ராஜ் மேகலா | மணப்பாடு |
| P. சந்தணதிரவியம் | பொற்பை |
| M.டேவிட்தேவராஜன் | வெள்ளகோவில் |
| J.டாம்சந்த் | பொற்பை |
| S.ஜோஸ்லின் | பொற்பை |
| A.கரோலின் சிறுமலர் | கொழுந்தட்டு |
| M.ஜெபரோஸ் நேசமணி | வாடியூர் |
| A.பென்சா அந்தோனி | வாடியூர் |
| S.நிர்மலா சந்தியாகுராஜன் | மார்க்கம்பட்டி |
| D.அந்தோனி ஏசுதாசன் | பொற்பை |
| S.மெர்லின் ரெக்ஸ் | கீழசென்னை |
| D.லூர்து ஆபிரகாம்ஜாய்ஸ் | திருச்சி |
| சகோதரி சொர்ணம் | திருச்சி |
| G.பூபால் | மதுரை |
| A.வியான்ஜிபோனோசா | திருச்செந்தூர் |
| M.செல்வகுமாரி | ந. குடியிருப்பு |
| P.மேரி பிரின்ஸிலா | பொற்பை |
| P.அந்தோணி ஜெயமஞ்சு | பொற்பை |
| C.வசந்த் விமலா | கூடன்குளம் |
| S.G.மேரி சரோஜா | |

# வாழ்வு தரும் வார்த்தைகள் –அக்டோபர் 2014

| தேதி | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|
| 1. | புனித குழந்தை திரேசாள் | யோபு 9:1-13 14-16 | லூக். 9:57-62 |
| 2. | காவல் தூதர்கள் | யோபு 19:21-27 | மத். 18:1-5,10 |
| 3. | | யோபு 27:1,12-21 40:3-5 | லூக் 10:13-16 |
| 4. | புனித பிரான்சிஸ் அசிசியார் | யோபு 42:1-3-5-6,12-17 | லூக்10:17-24 |
| 5. | ஆண்டின் ஞாயிறு | எசாயா 5:1-7<br>பிலி 4:6-9, | மத் 21:33-43 |
| 6 | புனித புரூனா | கலா 1:6-12; | லூக் 10:25-37 |
| 7. | புனித ஜெபமாலை | கலா 1:13-24; | லூக் 10:38-42 |
| 8. | புனித சைமன் | கலா 2:1-2,7-14; | லூக் 11:1-4 |
| 9. | புனித டென்னிஸ் | கலா 3:1-5 | லூக் 11:5-13 |
| 10. | புனித பிரான்சிஸ் போர்ஜியா | கலா 3:7-14; | லூக்11:15-26 |
| 11. | புனித கென்னத் | கலா 3:22-29; | லூக் 11:27-28 |
| 12. | ஆண்டின் ஞாயிறு | எசாயா 25:6-10;<br>பிலி 4:12-14,19-20; | மத் 22:1-14 |
| 13. | புனித எட்வர்ட் | கலா 4:22-24.26-27;31:5-1 | லூக் 11:29-32 |
| 14. | புனித கலிஸ்டஸ் | கலா 1:5-6; | லூக் 11:37-41 |
| 15. | புனித அவிலா தெரசா | கலா 5:18-25; | லூக் 11:42-46 |
| 16. | புனித மார்க்ரெட்மேரி | எபே 1:1-10; | லூக் 11:47-54 |
| 17. | புனித அந்தியோக்கு இன்னாசியர் | எபே1:11-14; | லூக் 12:1-7 |
| 18. | புனித லூக்கா | 2 திமொ 4:10-17; | லூக்10:1-9 |
| 19. | மறைபரப்பு ஞாயிறு | எசா 2:1-5;<br>எபே 3:2-12 | மாற்கு 16:15-20 |
| 20 | | எபே 2:1-10; | லூக்12:13-21 |
| 21 | புனித ஹிலாரியன் | எபே 2:12-22; | லூக் 12:35-38 |
| 22 | வண.போப் ஜான்பால் | எபே 3:2-12; | லூக் 12:39-48 |
| 23 | புனித ஜான் கப்பிஸ்திரான் | எபே 3:14-21; | லூக் 12:49-53 |
| 24 | புனித அந்தோனி கிளரரெட் | எபே 4:1-6; | லூக் 12:54-59 |
| 25 | | எபே 4:7-16; | லூக் 13:1-9 |
| 26 | ஆண்டின் ஞாயிறு | விப 22:20-26;<br>1தெச 1:5-10; | மத் 22:34-40 |
| 27 | | எபே4:32 5:8; | லூக்13:10-17 |
| 28 | புனித சைமன் ,யூதா | எபே2:19-22; | லூக் 6:12-19 |
| 29 | | எபே 6:1-9; | லூக் 13:22-30 |
| 30 | | எபே 6:10-20; | லூக் 13:31-35 |
| 31 | | பிலி 1:1-11; | லூக் 14:1-6 |



# திருவிவிலியம் நமது செல்வம்

## விவிலிய வினா – விடை போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி : தொடக்கநூல் அதிகாரம் 38 முதல் 59 வரை**



1. யூதாவின் தலைமகன் யார்–
2. கனவுக்குப் பொருள் சொல்வது யாருக்கு உரியது–
3. கனவில் பார்வோன் எந்த நதிக்கரையில் நின்றிருந்தான்–
4. யோசேப்பின் மனைவி பெயர் என்ன–
5. பார்வோனிடம் பணியாற்றிய போது யோசேப்புக்கு வயது என்ன–
6. யோசேப்பின் முதல் மகன் யார்–
7. எப்ராயிம் என்றால் என்ன பொருள்–
8. விலங்கிடப்பட்ட சகோதரன் யார்–
9. நாங்கள் நேர்மையானவர்கள்..............அல்ல.
10. எகிப்தியர் ................ உண்பதில்லை.
11. வெள்ளிக்கோப்பை யாருடைய பையில் காணப்பட்டது–
12. எகிப்தில் குடிபுகுந்த யாக்கோபின் குடும்பத்தார் எத்தனை பேர்–
13. எகிப்தியருக்கு அருவருப்பானவர்கள் யார்–
14. ............................ பகுதியில் அவர்கள் வாழட்டும்.
15. யாருடைய நிலங்கள் பார்வோனுக்கு உடைமையாகவில்லை–
16. யாக்கோபு எத்தனை ஆண்டுகள் எகிப்தில் வாழ்ந்தார்–
17. .............................. நீ ஒரு சிங்கக்குட்டி.
18. வலிமை மிகு கழுதை போன்றவர்கள் யார்–
19. கட்டவிழ்ந்த பெண் மான் யார்–
20. யோசேப்பு எத்தனை ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார்–





– **P.ஆல்வின் அண்ணாமலை,**
தலைமை ஆசிரியர் (ஓய்வு).

**அடுத்த இதழ்**

வேளாங்கன்னியில் கோயில் கொண்டுள்ள ஆரோக்கிய அன்னை பற்றி சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது. உங்களுடைய வாழ்வில் அன்னை புரிந்த அற்புதங்கள் அதிசயங்கள் மேலும் அன்னையைப் பற்றிய கட்டுரைகள் கவிதைகள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் எங்களை வந்து...

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-10-2014**

சந்தாதாரராக ஆகுங்கள் ! அன்னையின் அருள் பெறுங்கள் !

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.08.2014**

# திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாள மொழியில் திருப்பலி 11.00 மணி முதல் 12.00 மணி வரை ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி. 12.00 மணிக்கு நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். தேவைக்கேற்ப மாலை 4.00மணிக்கும், 6.30 மணிக்கும் திருப்பலி நடைபெறும்.
- முதல் சனி தவிர்த்து மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் புதன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்துமாதா கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் இரண்டாவது புதன் காலை திருத்தலத்தில் திருப்பலி, மாலை நான்கு சந்தி கெபியில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்
- மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

மாதத்தின் முதல் வெள்ளி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் நடைபெறும்.

**இணையூர் வழிபாடுகள்.**

**நவமுதலூர்**

- ஞாயிறுதோறும் ஊர் ஆலயத்தில் மாலை திருப்பலியும், வெள்ளி மாலை புனித மிக்கேல் அதிதூதர் கெபியில் திருப்பலியும் மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலியும் நடைபெறும்.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி<br>சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி<br>நற்கருணை ஆசீர் |